விலை ரூ:20.00 website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail:. valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 27 செவ்வாய்க்கிழமை (11.07.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 204

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே



### உயிரிழந்த இளைஞனின் இறுதிக்கிரியை இன்று

# வடமராட்சியில் தொடரும் பதற்றம்

## பொலிஸ், விசேட அதிரடிப்படை குவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி குடத்தனை பகுதியில் மணல் ஏற்றிச் சென்ற வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் பலியான நிலையில், வடமராட்சி பகுதியில் நேற்று பதற்ற நிலை காணப்பட்டது. ஆங்காங்கே வீதிகளில் ரயர்கள் எரிக்கப்பட்டுள்ள நிலையிலும் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். (23-ம் பக்கம்...)

## இலங்கையை கண்டித்து தமிழகத்தில் போராட்டம்

(சென்னை)

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து படகுகள் மற்றும் மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்யக் கோரி தமிழகத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, தமிழக மீனவர்களுக்கு எதிராக இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட 24

## நல்லிணக்கக்காரர்களே குழப்பங்களுக்கு காரணம்

### - சிங்கள ராவய

(கொழும்பு)

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள குழப்பமான சூழ்நிலைக்கு பிரதானமான காரணம் நல்லிணக்கக் காரர்களின் குப்பைகளே என சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல் கந்தே சுதந்த தேரர் தெரிவித்துள்ளார். 24

## விசேட பொலிஸ் குழு பருத்தித்துறை விரைவு

(கொழும்பு)

பருத்தித்துறையில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அதற்காக கொழும்பில் இருந்து விசேட குழு 24

## பௌத்தத்தை பாதுகாத்தல்; ஒற்றை ஆட்சியை உறுதிப்படுத்தல்

### இதுவே தேசிய அரசின் இலக்கு என்கிறார் வெளிவிவகார அமைச்சர் ரவி



(கொழும்பு)

பௌத்த மதத்தை பாதுகாத்தல்; போசித்தல்; அதனோடு இணைந்த கௌரவத்தைப் பெற்றுக்கொடுத்தல்; ஒற்றை ஆட்சிக்காக யாப்பு திருத்தத்தை உறுதிப்படுத்தல்; தேசிய அரசாங்கத்தின் அரசின் 23

## பருத்தித்துறை பொலிஸார் அதிகாரத்தை மீறியுள்ளனர்

### பொலிஸ் ஊடக பேச்சாளர்

(கொழும்பு)

பருத்தித்துறை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பருத்தித்துறை பொலிஸார் அதிகாரத்தை மீறி செயற்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது இந்த விடயம் அம்பலமாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் உப பரிசோதகர், பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோரின் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய லொறி சாரதி தலைமறைவாகியுள்ளார். 24

## கைதான பொலிஸார் விளக்கமறியலில்

(கரணவாய்)

குடத்தனைப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட ஹன்டர் ரக வாகனம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இளைஞர் ஒருவர் உயிரிழக்கக் காரணமாக இருந்ததாகக் சந்தேகிக்கப்படும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் எதிர்வரும் 24-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி நளினி கந்தசாமி உத்தரவிட்டுள்ளார். 02

## யாழ் நகரில் இளைஞர்கள் அடாவடி

### 4 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் உள்ள பலவேறு பகுதிகளில் 24

## புதிய அரசியல் யாப்புக்கு காவியுடையினரே தடை!

### மாவை சேனாதிராசா விசனம்



(கொழும்பு)

இலங்கையில் அமைதியை சீர்குலைத்த பொறுப்பு காவி உடை தரித்தவர்களுக்கு உள்ளது என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

அதே காவியுடை தரித்தவர்களே புதிய அரசியல் யாப்பு பணிகள் பூர்த்தியடைவதற்கு தடையாக உள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தி 24

## நாட்டு மக்களின் தேவையே புதிய அரசியல் யாப்பு

### விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டு மக்களின் தேவைப்பாடுகளைக் கருதியே புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படுவதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் தேவைப்பாடுகளுக்கு அமைய அந்த செயற்பாடு மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கம்பளையில் புதிய நீதிமன்ற கட்டிடத்தொகுதிக்கான அடிக்கல் நாட்டு விழா நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார்.

புதிய சம்பிரதாயங்களுக்கு அமைய இந்த முறை அரசியல் யாப்பை உருவாக்க நாங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு ள்ளோம்.இதுவே உண்மையான ஜனநாயக சம்பிரதாயமா 02

## வட கிழக்கை இணைக்கக் கோரவில்லை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களை மீள இணை 02

## ஜனா. ஆணைக்குழு முன் கோத்தா, தினேஷ் ஆஜர்!

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோர் பாரியளவிலான மோசடிகள் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்று ஆஜராகினர்.

காங்கேசன்துறை, சீமெந்து தொழிற்சாலைக்கு சொந்தமான கோடிக் கணக்கான ரூபாய் பெறுமதியான உபகரணங்களைப் பாகங்களாக பிரித்து விற்பனை செய்தமை தொடர்பில் பாரியளவிலான மோசடிகள் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

ஆணைக்குழுவிடம் தாம் வழங்கியிருந்த வாக்குமூலத்தில் ...

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் பொலிஸார் மேற்கொண்டனர் என்று கூறப்படும் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கை மனித ...

## ஞானசார தேரர் சரியான நேரம் வெளிப்படுவார்!

(கொழும்பு)

நாட்டில் தற்பொழுது என்ன நடைபெறுகின்றது என்பதை 24

## மக்கள் கருத்து - 2

அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்துக்கு மகாநாயக்கர்கள் எதிர்ப்பு.
இப்போது தமிழ்த் தலைமை செய்ய வேண்டியது என்ன?

உங்கள் கருத்துக்களை வலம்புரியில் பதிவு செய்யுங்கள்

வைபர் செயலி : 076 636 3378
தொலைபேசி : 021 567 1530
மின்னஞ்சல் : valampurii@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமை...

ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் ரி.கனராஜ் தலைமையிலான குழுவினர் றேறறு சம்பவ இடத்துக்குச் சென்று ஆராய்ந்த துடன், உயிரிழந்தவரின் உறவினர்களிட மிருந்தும் தகவல்களை சேகரித்துக் கொண்ட னர். (மு-11)

## நாட்டு மக்களின்...

கும்.

சிறிமாவோ பண்டாரநாயக்க குமார துங்க, 3ல் 2 பெரும்பான்மையைப் பெற்றி ருந்த போது முதலாவது அரசியல் யாப்பை உருவாக்கி இருந்தார்.

மக்கள் அதனை சிறிமாவோ பண்டார நாயக்கவின் அரசியல் யாப்பு என்று விமர்சி த்தனர்.

1978ம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன நிறைவேற்று அதி காரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஸ்தாபித்து புதிய அரசியல் யாப்பை உரு வாக்கி இருந்தார்

இதனை மக்கள் ஜே.ஆர்.ஜெயவர்த னவின் யாப்பு என்று விமர்சித்தனர்.

அதனால் இந்த முறை நாங்கள் யு.என். பி. என்ற அரசியல் .யாப்பை உருவாக்க வில்லை.

சிறிலங்கா சுதந்திர கட்சியின் அரசியல் யாப்பும் அல்ல.

இலங்கை குடியரசு அரசியல் யாப்பையே நாங்கள் உருவாக்குகின்றோம்.

நாட்டு மக்கள் விரும்பும் அரசியல் யாப் பையே நாங்கள் உருவாக்கவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (மு-11)

**விற்பனையாளர் தேவை**

எமது புடைவை நிறுவனத்திற்கு O/L அல்லது A/L படித்த புடைவை வியாபாரம் பழக ஆர்வம் உள்ள ஆண்/பெண் தேவை.

**சென்னை பெசன் வேல்ட்**

63, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம். (9752)

## ஜனா.ஆணைக்குழு...

காக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று ஆணைக்குழு முன்னிலையில் ஆஜரானார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் நேற்று ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு சென்றிருந்தார்.

முன்னாள் அமைச்சர் தினேஷ் குண வர்த்தனவும் அவருடன் இருந்தார்.

நீர் வழங்கல் சபையின் கொடுக்கல் வாங் கல் தொடர்பில் முன்னெடுக்கப்படுகின்ற விசா ரணைகள் தொடர்பில் தினேஷ் குண வர்த்தனவிடம் வாக்குமூலம் பதிவு செய்ய ப்பட்டது. (மு-11)

## கைதான பொலிஸார்...

நேற்று முன்தினம் பருத்தித்துறை பொலி ஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோக த்தில் ஒருவர் உயிரிழந்தார்.

இத்துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக தெரி விக்கப்படும் பருத்தித்துறை உப பொலிஸ் பரி சோதகர் சஞ்சீவன் மற்றும் முபராக் ஆகிய இருவரை நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (மு-60)

## வட கிழக்கை...

க்குமாறு தமிழ் அரசியல் கட்சிகளோ கோர வில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது. பெருந்தெருக்கள் மற்றும் உயர்கல்வி அமைச் சர் லக்ஸ்மன் கிரியல்ல இதனைத் தெரி வித் துள்ளார்.

புதிய அரசியல் சாசனத்துக்கு ஆதரவு திர ட்டும் முனைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாகவும் பாராளுமன்றில் ஆதரவு திரட்டப்ப டவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக் கப்பட உள்ளதாக சிலர் பிழையான தகவல் களை வெளியிட்டு வருவதாகத் தெரிவித்து ள்ள அவர்,

வடக்கு கிழக்கினை இணைக்கவோ நாட்டை பிளவுபடுத்தவோ கோரப்போவதில்லை என தமிழ் அரசியல் கட்சிகளே கூறி வரும் நிலை யில் சிலர் பொய்ப்பிரசாரத்தில் ஈடுபட்டு வருவ தாகக் குறிப்பிட்டுள்ளார். (மு-11)

# யாசகர்கள் இடையே சோற்றுக்காக மோதல்

## ஒருவர் குத்திக்கொலை

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு பிரதான வீதியில் கத்தோலி க்க தேவாலயம் அருகில் உள்ள மஞ்சள் கட வையில் யாசகர் ஒருவர் மற்றொரு யாசக ரினால் கத்தியால் குத்திக் கொலை செய்யப் பட்டுள்ளார்.

சுமார் 65 வயது மதிக்கத்தக்க பத்ம நாதன் என அறியப்படும் யாசகரே இவ்வாறு குத்திக் கொலை செய் யப்பட்டுள்ளதாகவும் அவரை கொலை செய்ததாகக் கூறப்ப டும் மற்றொரு யாச கரை நீர்கொழும்பு பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்ச கர் ருவன் குண சேகர தெரிவித்தார்.

சோற்றுப் பொதி ஒன்றினைப் பெற் றுக் கொள் வதில் ஏற்பட்ட வாய்த்தர்க் கம் இறுதியில் கத்திக் குத்தில் முடிவ டை ந்துள்ளதாகவும் கொலைக்கு பயன் படுத்தப்பட்ட கத்தியை அருகில் உள்ள வடி கானில் இருந்து பொலிஸார் மீட் டதா கவும் நீர்கொழும்பு பொலிஸார் தெரி வித்தனர்.

இந்த கொலை தொடர்பில் மேலும் அறிய முடிவதாவது.

பத்மநாதன் எனும் யாசகருக்கும் சந்தேக நபருக்கும் இடையே கடந்த மூன்று வருட ங்களாக தனிப்பட்ட பிரச்சினை ஒன்று இரு ந்து வந்து ள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

**கிழவன்காடு கலாமன்றம் யாழ்க்கிளை**

**அறநெறிப் பாடசாலை மற்றும் கோலம், மாலை, தோரணம் பின்னுதல் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம்**

மேற்படி கலாமன்றத்தில் நடைபெற்று வரும் அறநெறிப் பாடசாலையில் இணைய ஆர்வ முள்ள மாணவர்கள் எதிர்வரும் 14.07.2017 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 04.30 மணி க்கும் கோலம், மாலை, தோரணம் பின்னுதல் பயிற்சி நெறியில் இணைய விரும்புபவர்கள் எதிர்வரும் 15.07.2017ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கும் வருகை தந்து இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.11, 1வது<br>
கஸ்தூரியார் ஒழுங்கை,<br>
(உதயன் பணிமனை<br>
அருகில்)<br>
யாழ்ப்பாணம்.

பதிவாளர்<br>
கிழவன்காடு கலாமன்றம்<br>
யாழ்க்கிளை

(சி-9032)

# மரண அறிவித்தல்



# வ.ஆ.அதிரூபசிங்கம்

(BA)

**(இளைப்பாறிய பிரதி மேலதிகாரி-<br>
பருத்தித்துறை போக்குவரத்துச் சபை)**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24-08-1938 | 06-07-2017 |

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், வதி விடமாகவும் கொண்ட வ.ஆ.அதிரூபசிங்கம் அவர்கள் கடந்த (06.07.2017) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சீதாலட்சுமி தம்பதிக ளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம்-அழகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், தங்கவேலாயுதத்தின் சகோதரனும், பத்மலோசனா அவர்களின் அன்புக் கணவரும், இளமதி, காலஞ்சென்ற இளவேணி மற்றும் கப்டன் ஆதவன் (வர்த்தகக் கப்பல்), கப்டன் ஆசுகன் (வர்த்தகக் கப்பல்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குலசேகரன், அமுதா, நிர்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆரணன், ஆகமன், அமிழ்தினி, வாசவி, அச்சுதை, அற்புதை, அநிந்திதை ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.07.2017)புதன்கிழமை அவரது இல்லத்தில் பி.ப 02.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பி.ப 04.00 மணியளவில் வல்வெட்டித்துறை, ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**அம்மன் கோவிலடி,<br>
வல்வெட்டித்துறை.<br>
தொ.பே:-0772428411,<br>
0776214177**

(சி-9028)

**தகவல்:-<br>
குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் கொந்தளிப்பு



பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் மற்றொரு அப்பாவி இளைஞர் கொல்லப்பட்டுள்ளார்.

சட்டத்தை மீறியதாலேயே அந்த இளைஞர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக பொலிஸ் தரப்பு வழமை போன்று தமது தரப்பு குற்றத்தை சாதாரணமாக மறுத்துள்ளது. இதற்கு முன்னர் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் இருவரும் யாழ்.பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் அநியாயமாக உயிரிழந்திருந்தனர். இந்தச் சம்பவத்திற்கு இன்னமும் நீதி கிடைக்கப்பெறாத நிலையில் மற்றுமொரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

வல்லிபுரம் ஆலயத்துக்குச் செல்லும் வீதியில் 6 ஆம் கட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இந்த துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர் துன்னாலையைச் சேர்ந்த 24 வயதுடைய யோகராசா தினேஸ் என்ற இளைஞன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சட்ட விரோதமான முறையில் மணல் ஏற்றி வந்தவர்களை இடைமறித்த போது வாகனத்தை நிறுத்தாததன் காரணமாகவே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் கூறியுள்ளனர். பிரதேசத்தில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஹன்டர் ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அதில் இருந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சட்டவிரோத மணல் கடத்தலைத் தடுக்கும் நோக்கில் இந்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. ஹன்டர் ரக வாகனம் மணலுடன் கைப்பற்றப்பட்டுள்ளது. விசாரணைகள் நடத்தப்படுகின்றன. அதன்பின்னரே முழுமையான தகவல்களைத் தெரிவிக்க முடியும் என கூறி மேலதிக தகவல்களை வழங்க பொலிஸார் மறுத்துள்ளனர்.



இதேவேளை உயிரிழந்த இளைஞன் 10 நாட்களுக்கு முன்னரே வெளிநாடொன்றிலிருந்து வந்திருந்தார் என அவரது உறவினர்கள் தெரிவித்தனர். நேற்று முன்தினம் நண்பகல் உணவு உண்டுவிட்டு யாழ்ப்பாணம் சென்றுவந்து மோட்டார் சைக்கிளை வீட்டில் நிறுத்திய அவர் வல்லிபுரம் கோயிலுக்குச் சென்று வருகின்றேன் என்று கூறிச் சென்றார் என்றும் அவர்கள் தெரிவித்தனர். அவர் மணல் கடத்தலில் ஈடுபடுவதில்லை என்றும் அவர் மீண்டும் வெளிநாடு செல்லவிருந்தார் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை இந்தச் சூட்டுச் சம்பவத்தால் பெரும் பதற்ற நிலைமை ஏற்பட்டது. உயிரிழந்தவரின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் வைத்தியசாலையில் திரண்டனர். மந்திகை வைத்தியசாலைக்கு வந்த பருத்தித்துறைப் பொலிஸாரின் ஜீப் மீது ஆத்திரமடைந்த பொதுமக்கள் கற்களால் எறிந்து தாக்குதல் நடத்தினர். மந்திகை வைத்தியசாலைப் பகுதியில் பதற்றமான நிலைமை ஏற்பட்டதை அடுத்து காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், காங்கேசன்துறை நெல்லியடி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் உட்பட 50 பொலிஸாரும் அவர்களுடன் நான்கு வாகனங்களில் சிறப்பு அதிரடிப் படையினரும் மந்திகை ஆதார வைத்தியசாலைக்குச் சென்றனர்.



இதேவேளை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கருதப்படும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நெல்லியடியில் அமைந்துள்ள அவரது வீட்டின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் வீட்டிலிருந்த பொருட்களையும் சேதப்படுத்தினர் என்று தெரிவிக்கப் பட்டது. சுமார் 20 பேர் கொண்ட குழுவினர் முகத்தை துணியால் மூடிக் கட்டியவாறு தாக்குதல் நடத்தினர் என்று பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து துன்னாலையில் அமைக்கப்பட்டிருந்த பொலிஸ் காவலரண் ஒன்றும் இனந்தெரியாதோரால் அடித்து நொருக்கப்பட்டது. இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்துப் பொலிஸ் உத்தியோகத்தர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கொல்லப்பட்ட இளைஞனின் இடுப்புக்கு மேற்பட்ட பகுதியில் சூட்டுக்காயம் காணப்பட்டது என்று வைத்திய பரிசோதனையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



இந்த சம்பவத்தை விசாரணை செய்யவென கொழும்பில் இருந்து விசேட குழுவொன்று பருத்தித்துறைக்கு வந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

அதற்கமைய பொலிஸ் தலைமையகத்தின் விசேட விசாரணைப் பிரிவின் உதவி பொலிஸ் அதிகாரி உட்பட அதிகாரிகள் குழுவொன்று சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு நேற்றைய தினம் வருகை தந்துள்ளது.

இந்த விசேட பொலிஸ் குழு அங்கு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. சுடுவதற்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் ஆகியவற்றை விசாரணைக்குழு மீட்டுள்ளது.

இதேவேளை நேற்று கொடிகாமம் பருத்தித்துறை வீதியால் சென்ற பொலிஸ் வாகனம் ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தொடரும் தாக்குதல்களால் அங்கு மீண்டும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. தொடரும் கொலைகளால் பொலிஸ் தரப்பு மீது பொதுமக்கள் மத்தியில் வெறுப்புணர்வும் நம்பிக்கையீனமும் ஏற்பட்டுள்ளது.




இளைஞன் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து வடமராட்சியில் நேற்றும் பல பகுதிகளில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபட்டனர். வீதிகளில் ரயர்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. இராணுவத்தினரின் வாகனம் மற்றும் பேருந்து மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் வடமராட்சியில் பெரும் பதற்றம் நீடிக்கிறது.

உ.சாளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு படைத்தது சிம்பாப்வே
## சொந்த மண்ணில் சூனியமானது இலங்கை



இலங்கை அணிக்கு எதிரான ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் சிம்பாப்வே அணி 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை 3:2 என்ற கணக்கில் கைப்பற்றி வரலாறு படைத்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாப்வே அணி, 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் மோதியது.

நான்கு போட்டிகள் முடிவில் தொடர் 2:2 என சமனிலையான நிலையில் தொடரை தீர்மானிக்கும் 5ஆவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி நேற்று அம்பாந்தோட்டையில் நடைபெற்றது.

போட்டியின் நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணித் தலைவர் கிரேம் கிரீமர் முதலில் பந்து வீச்சை தெரிவு செய்தார்.

அதன்படி முதலில் களமிறங்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 203 ஓட்டங்கள் எடுத்தது.

அதிகபட்சமாக தனுஷ்க குணாதிலக 52, அசேல குணரத்ன ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்கள் எடுத்தனர்.

சிம்பாப்வே பந்துவீச் சில் சிக்கந்தர் ராஷா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

204 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய சிம்பாப்வே அணி 38.1 ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

சிம்பாப்வே அணியின் தொடக்க வீரர் மசகட்சா 73 ஓட்டங்கள் எடுத்தார்.

இல ங்கை தரப்பில் சிறப்பாக பந்து வீசிய அகில தனஞ்சய 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இந்த வெற்றியின் மூலம் இலங்கை மண்ணில் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 3-2 என கைப்பற்றி சிம்பாப்வே வரலாறு படைத்ததுடன், அந்நிய மண்ணில் நீண்ட இடைவெளிக்கு பின்னர் (5706 நாட்கள்) தொடரைக் கைப்பற்றியது.

# கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ.து)
## பதிவு இலக்கமும் பதிவுத் திகதியும் PA/50 - 08.03.1972

**கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல். - 15.07.2017**

வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998-05-19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகளுக்கு அமைய, முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய திரு.உ.சுபசிங்க ஆகிய நான் 2015-10-12ஆம் திகதிய 1936/6ம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என் மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 20(2) இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளினதும் கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களை பின்வரும் கால அட்டவணையின் படி நடாத்துவதற்கு அந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்கும் கீழ்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- இதற்கமைய இக் கூட்டங்களிற் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொர்துச்சபையில் இருந்து கிளைக்குழுவுக்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையை கோருவார். இவர்களுள் குறைந்தது இருவராவது (2) 18 -35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் அவ்வவ் தொகைகளுக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.
- இரண்டு வேட்பாளர்கள் அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன், சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்துமூலம் அறிவிப்பார்.
- தகுதியுள்ள கிளைப்பொதுச்சபை அங்கத்தவர்களிற்கு கிளைக்குழுத் தெரிவு தொடர்பான அறிவித்தல்களை தனித்தனியாக அனுப்பி வைக்கப்படுகின்றன. இவ்வறிவித்தல்கள் கிடைக்கப்பெறாத எவரேனும் தகுதியுள்ள அங்கத்தவர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொண்டு இக்கிளை பொதுச்சபை நடைபெறும் திகதியில் தங்களிற்குரிய கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து கிளைக்குழுவைத் தெரிவு செய்யுமாறு வேண்டுகின்றேன்.

**கிளைப்பொதுச்சபை கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்.**

கிளை பொதுச்சபை கூட்டங்கள் நடைபெறும் காலம் - 15.07.2017ம் திகதி சனிக்கிழமை மு.ப 10.00 மணி

| இல | கி.இல | கிளைபெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01. | 1 | கரடிப்போக்கு | திருமதி அ.றஞ்சினி | கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி மண்டபம் |
| 02. | 2 | கணேசபுரம் | திருமதி மு.புஸ்பலக்ஸ்மி | கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி மண்டபம் |
| 03. | 3 | D - 08 | திருமதி கே.கலைவாணி | கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி மண்டபம் |
| 04. | 4 | பாம்புக்கமம் | திருமதி த.செல்வகேந்தினி | கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி மண்டபம் |
| 05. | 5 | பரந்தன் | திருமதி பு.தர்சினி | கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி மண்டபம் |
| 06. | 6 | சேவியர்சந்தி | திருமதி சு.தயாதேவி | கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி மண்டபம் |
| 07. | 7 | திருநகர் - B | திரு.அ.ஜேம்சன் | கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி மண்டபம் |
| 08. | 8 | 155 - A | திரு.ச.குமாரதாஸ் | கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி மண்டபம் |
| 09. | 9 | முரசுமோட்டை | திரு.உ.ஜெயந்தப்பிரகாஸ் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 10. | 10 | வன்னேரி | திரு.க.உதயரூபன் | கோணாவில் மகா வித்தியாலயம் |
| 11. | 11 | ஆனைவிழுந்தான் | திரு.அ.துஸ்யந்தன் | கோணாவில் மகா வித்தியாலயம் |
| 12. | 12 | ஆரோக்கியபுரம் | திரு.ஜெ.சஞ்சீவ் | கோணாவில் மகா வித்தியாலயம் |
| 13. | 13 | அக்கராயன் - A | திரு.கு.சஜீபன் | கோணாவில் மகா வித்தியாலயம் |
| 14. | 14 | ஸ்கந்தபுரம் | திரு.பா.வாகீசன் | கோணாவில் மகா வித்தியாலயம் |
| 15. | 15 | கண்ணகிபுரம் | திரு.தே.வேணுகோபாலன் | கோணாவில் மகா வித்தியாலயம் |
| 16. | 16 | 1000 ஏக்கர் - A | திரு.சி.பாலசுந்தரம் | கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி மண்டபம் |
| 17. | 17 | கட்சன்வீதி | திரு.ம.லெட்டினன் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 18. | 19 | வட்டக்கச்சி | திரு.செ.செல்வகுமாரன் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 19. | 20 | இராமநாதபுரம் | திரு.சி.ஶ்ரீதரன் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 20. | 22 | அக்கராயன் - C | திரு.அ.ஆனந்தன் செந்தூர்செல்வன் | கோணாவில் மகா வித்தியாலயம் |
| 21. | 23 | புதுமுறிப்பு | திரு.பெ.பவள்ராஜ் | கோணாவில் மகாவித்தியாலயம் |
| 22. | 24 | புளியம்பொக்கணை-B | திரு.ச.பாலகுமார் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 23. | 25 | பிரமந்தனாறு | திருக.திசாகரன் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 24. | 26 | புன்னைநீராவி | திரு.ச.ரதிகுலன் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 25. | 27 | D-10 உருத்திரபுரம் | திரு.வை.சரவணன் | கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி மண்டபம் |
| 26. | 28 | கல்மடுநகர் | திரு.ந.நாவேந்தன் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 27. | 29 | கண்டாவளை | திரு.இ.விஜயகுமார் | தர்மபுரம் மத்திய கல்லூரி |
| 28. | 30 | திருநகர் - A | திரு.பெ.கோகிலன் | கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி மண்டபம் |
| 29. | 31 | ஆனையிறவு | திருமதி ஶ்ரீ.எமெல்டா | கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி மண்டபம் |

**கிளைக்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யத் தகுதியற்றவர்கள்.**

01. 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்.
02. கடனைத் தீர்க்க வகையற்றவர் என பிரகடனம் செய்தவர். அல்லது அவ்வாறு ஒரு வழக்கிற் தீர்ப்பளிக்கப்பட்டவர்.
03. அதிகாரமளிக்கப்பட்டவராற் சித்தசுவாதீனமற்றவர் எனப் பிரகடனஞ் செய்யப்பட்டவர்.
04. இச்சங்கத்திற் பெற்ற கடனை அல்லது வேறொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தில் அல்லது வேறு சங்க ஒழிப்போனுக்கு மூன்று மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்குள் தவணை தப்பியவராகவுள்ள ஒருவர் அல்லது இச்சங்கத்திற்கு அல்லது வேறொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்கு அல்லது ஒழிப்போனுக்கு வேறுவகையான சென்மதியொன்றை செலுத்த தவறிய ஒருவர்.
05. சங்கத்தின் பொதுச் சபையின் அபிப்பிராயப்படி உறுப்பினர் என்ற முறையிற் தவிர, நடைமுறையிலுள்ள அல்லது பேரப்பேச்சளவிலிருக்கும் சங்கத்தின் ஒப்பந்தத்திலோ நிதி அல்லது வேறுவகைக் கொடுக்கல் வாங்கல்களிலோ அல்லது சங்கம் செய்யும் ஒரு விற்பனையிலோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறை கொண்டுள்ள ஒருவர்.
06. சங்கத்தின் பொதுச்சபையின் அபிப்பிராயத்தின்படி சங்கத்தின் நலன்களோடு முரண்படுகின்ற ஒரு வியாபாரத்திலோ அல்லது நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபட்டுள்ள ஒருவர்.
07. இச்சங்கத்திலோ அல்லது இச்சங்கம் உறுப்பினராகவுள்ள பிறிதொரு சங்கத்திலோ சம்பளம் பெறும் ஒருவர்.
08. சட்டத்திற் குறிப்பிட்ட தகுதியீனங்களையுடைய ஒருவர்.
09. கிளையின் வாக்காளர் பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்.
10. கூட்டுறவுச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளுக்கமைய தனது பதியை அல்லது வேலையை கடந்த 05 ஆண்டுகளில் விட்டகல வேண்டிய நிலைக்கு ஆளானவர்.
11. நாடாளுமன்ற உறுப்பினர் / மாகாணசபை உறுப்பினர்கள் / மாநகர சபை உறுப்பினர்கள் / பிரதேச சபை உறுப்பினர்கள்.
12. அங்கத்தவராக சேர்ந்து ரூபா - 100.00ஐப் பங்குப்பணமாகச் செலுத்தி முடிக்காதவரும் அங்கத்தவராகச் சேர்ந்து ஒரு வருடம் பூர்த்தியாகாதவருமான ஒருவர்.
13. உடன் முன்சென்ற 03 ஆண்டுகளுள் தீய ஒழுக்கச் செயல்களுக்காக குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டவர் அல்லது மூன்று மாதங்களிற்கு மேற்பட்ட சிறைத் தண்டனைக்கு தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்.
14. சங்கத்தில் ஆதாயங் கருதி ஏதாவது ஒரு பதவியை அல்லது இடத்தினை வகிப்பவர் அல்லது ஆணையாளரின் முன்னனுமதியின்றி ஏதாவது தகைமைக் கொடையை பெறுபவர்.
15. இயக்குநர் சபையினால் அல்லது கிளை நிர்வாக சபையினால் உறுப்பினராகக் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படாத அல்லது கிளை நிர்வாக சபையினால் உறுப்பினராகக் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படாத அல்லது மேன்முறையீடு இயக்குநர் சபையினால் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் பிரிவு 6(2)இன் கீழ் ஆணையாளரால் மீளாய்வு மூலம் அல்லது இவ்விதியின் 2:4 அல்லது 2:6 இன் கீழ் அல்லது வாக்காளர் அட்டவணையிற் பெயர் சேர்க்கப்படாத ஒருவர்.

(சங்கத்தின் துணைவிதி பிரிவு 20 (3)க்கமைவானது)

(ஒப்பம்) திரு.உ.சுபசிங்க
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,
முல்லைத்தீவு.

(C-9031)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக எஸ்.ஞானசம்பந்தன் நேற்றையதினம் பதவி ஏற்றுக் கொண்டார்.முன்னதாக கல்லூரி முன்றலில் இருக்கும் கிருபாகர சிவசுப்ரமணிய சுவாமி கோவிலிலிருந்து அவர் அழைத்து வரப்படுவதையும் பொன்னாடை போர்த்தி வரவேற்பதையும் புதிய அதிபர் பெற்றோர்களை சந்தித்து கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 1 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
20 - 08 - 1999

மறைவு
23 - 06 - 2016

அமரர் செல்வன்.

## தேவராசா நிறோஜ்



திதி: திருதியை

ஓடி மறைந்ததுவே ஓராண்டு- இன்றும்
எம் அருகில் நீ வேண்டுமடா!
சொட்டும் எம் விழிநீர் இன்றும் உன்
நினைவினை சொல்லுதடா!
மகனாய், தம்பியாய், அண்ணனாய்
நீ எம்மை மகிழ வைத்த காலங்களை
இன்றும் எம்முன் நிழலாட வைத்துவிட்டு
நீ மட்டும் ஏன் நீள் துயில் கொண்டாய்

11.07.2017 இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காளி கோவிலடி,
தாவடி வடக்கு.

இங்ஙனம்
என்றும் அழியாத நினைவுகளுடன்
வாழும் குடும்பத்தினர்

(9721)


# இராசி பலன்

11.07.2017
(ஆனி 27, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
துதியை பிற்பகல் 12.37 மணிவரை
திருவோணம் முன்னிரவு 9.16 மணிவரை
சுபநேரம் 10.29 - 11.59 மணிவரை
இராகுகாலம் 2.59 - 4.29 மணிவரை
உலக சனத்தொகை தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சுக் | செவ், |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>புனர்பூசம், பூசம் | | புதன் |
| சந் | | | |
| | சனி | | குரு |

**மீனம்** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு.

**மேடம்** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், யோகமான நாள்.

**இடபம்** நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வம்பு வழக்குகளை சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

**மிதுனம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், எதிலும் நிதானமாகச் செயற்படுவது நல்லது, வேலைச் சுமை கூடும், விரயங்கள் கூடும் நாள்.

**கும்பம்** சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், உறவினர் தொடர்பாக விரயங்கள் ஏற்படலாம், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

**மகரம்** உடல்நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆழ்ந்த சிந்தனையுண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்** மறைமுக எதிர்புகள் மாறும், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தொழிலில் எதிர்பார்ப்புகள் கைகூடும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், மாதர் நட்புண்டு.

**விருச்சிகம்** பயணங்களால் பலனுண்டு, வளர்ச்சி கூடும் நாள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும் [illegible] கூடும், போசன சுகமுண்டு.

**துலாம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், தொழில் மேன்மையுண்டு.

**கன்னி** மனநிறைவு கூடும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்சம் வாங்காததும் ஊழல் செய்யாததுமே நான் செய்த குற்றம்

## ஐங்கரநேசன் ஆதங்கம்



என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரணை செய்த குழு தனது அறிக்கையில் நான் நிதிமோசடியில் ஈடுபட்டதாகவோ, இலஞ்சம் வாங்கியதாகவோ, ஊழல் புரிந்ததாகவோ எங்கும் குறிப்பிடவில்லை. இவை யெவையும் நிரூபிக்கப்படவில்லை என்று தங்களது அறிக்கையில் தெரிவித்திருக்கும் விசாரணைக்குழு, கடைசியில் இதற்கு முரணான வகையில் என்னைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. அவர்களது தீர்ப்பின்படி நான் இலஞ்சம் வாங்காததும் ஊழல் செய்யாததுமே அரசியலில் நான் செய்த குற்றமாக உள்ளது என்று முன்னாள் விவசாய அமைச்சரும்வட மாகாண சபை உறுப்பினருமாகிய பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபையில் அண்மையில் இடம்பெற்ற குழப்பங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் பொ.ஐங்கரநேசனின் விளக்கம் அளிப்புக் கூட்டம் நடைபெற்றது.

நல் லூர் பிரதேச சனசமூகநிலையங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,




விசாரணைக் குழுவினர் தங்கள் அறிக்கையில் உழவர் விழாக்களைக் களியாட்ட நிகழ்ச்சிகளாகக் குறிப்பிட்டிருப்பதோடு, இவ்விழாக்களை மாவட்டமட்ட நிகழ்ச்சிகளோடு மட்டுப்படுத்தாமல் மாகாண மட்டத்துக்கு விரிவுபடுத்தியது தொடர்பாகவும் கேள்வி எழுப்பியுள்ளனர். இந்நிகழ்ச்சிகளை தேர்தல் கால வாக்குத் திரட்டல் என்றும் அமைச்சரின் பெருமையை வெளிக்கொண்டு வருவதற்கான முயற்சிகள் என்றும் குற்றம் சாட்டியுள்ளனர். உழவர் பெருவிழா முற்றுமுழுதாக சாதனை உழவர்களைக் கௌரவிக்கும் விழா. இதனைக் களியாட்ட விழாவாக அவர்கள் குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. மத்திய அரசாங்கம் தேசிய மட்டத்தில் போட்டிகளை நடத்தி விவசாயிகளைக் கௌரவிக்கும்போது, வடமாகாண அரசாங்கம்மாகாண மட்டத்தில் போட்டிகளை நடத்தி எமது விவசாயிகளைக் கௌரவிப்பதில் தவறேதும் இல்லை. இந்தக் கௌரவம் விவசாயிகளை உற்சாகப்படுத்தி மேன்மேலும் சாதனைகளைப் புரிவதற்குத் தூண்டுகின்ற ஒரு ஊக்கி.

நிகழ்ச்சிகளுக்குக் கூட்டம் சேர்வதை அமைச்சரின் தேர்தல் கால வாக்குத் திரட்டும் முயற்சி என்று கொச்சையாக இவர்கள் குறிப்பிட்டாலும், இதன் பின்னால் கூட்டத்தைக் கண்டு அஞ்சும் அதிகார வர்க்கத்தின் மனோநிலையே மேலோங்கி இருக்கிறது. ஆளும்தரப்பும், அதிகார வர்க்கமும் மக்கள் கூட்டமாகத் திரளுவதை விரும்பாது. அனுமதிக்காது. இவ்வாறு சேரும் கூட்டம் எங்கே தங்கள் அதிகாரத்துக்கு எதிராக ஒருநாள் திரும்பி விடுமோ என்ற அச்சம் ஆளும் தரப்புக்கு எப்போதும் இருக்கும். அவர்களின் மனோநிலையையே விசாரணைக்குழுவும் பிரதிபலித்திருப்பது வேதனைக்குரியது.

விசாரணைக்குழுவின் முன்னால் நான் தோன்றி விட்டு பின்னர் அக்குழுவை குறைசொல்லலாமா என்று சிலர் என்னிடம் கேட்டார்கள், நான் இலஞ்சம் வாங்கினேன், நிதிமோசடியில் ஈடுபட்டேன் என்று குறிப்பிட்டுவிட்டு நான் பதவி விலக வேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தால் அது பொய்யாக இருந்தாலும் இக்குழுவை நான் விமர்சித்திருக்க முடியாது. ஆனால், அவர்களே தங்களது அறிக்கையில் நான் நிதிமோசடியில் ஈடுபட்டதை நிரூபிக்க முடியவில்லை என்று குறிப்பிட்டுவிட்டு, நான் பதவிவிலகவேண்டும் என்றும் கோரியிருப்பதுதான் அவர்களின் நீதி நியாயம் குறித்தும், மாகாண சபையில் குழப்பங்களை ஏற்படுத்தி முதலமைச்சரை பதவியிறக்கும் சதிமுயற்சிக்கு இவர்களும் துணைபோயுள்ளார்களோ எனவும் சந்தேகப்பட வைத்திருக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வேதபாராயண சனச மூக நிலையத்தின் தலைவர் இசத்தியானந்தனின் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் வட மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசனும் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார். (இ-3)

## கும்பாபிஷேக தின அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கிழக்கு குரு நாதசுவாமி ஆலய கும்பாபிஷேக தின அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 22.07.2017 சனிக்கிழமை மாலை வைரவர் பொங்கலுடன் நிறைவு பெறவுள்ளது. (இ-3)

## ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு வித்தியாசாலையின் கந்தையா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்.

வித்தியாசாலையின் அதிபர் கு.திலீபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா மற்றும் ஓய்வு நிலை அதிபர் செல்வி க.கமலநாயகி ஆகியோர் கலந்து கொள்வர்.(இ)

## மின்விளக்குகள் ஒளிர்வதில்லை

இளவாலை பிரதான வீதிகளில் உள்ள மின் விளக்குகள் இரவு வேளையில் ஒளிர்வதில்லை எனவும் இதனால் இரவு வேளையில் இவ்வீதியால் பயணம் செய்வோர் அச்சத்துடன் செல்வதாகவும் பிரதேச மக்கள் சட்டிக் காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனபிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-104)

## ஆட்டோ- துவிச்சக்கரவண்டி விபத்து; குடும்பஸ்தர் வைத்தியசாலையில் அனுமதி



வேகக் கட்டுப்பாட்டையிழந்த ஆட்டோ துவிச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் பலாலி வீதி கோண்டாவில் டிப்போவுக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பலாலி வீதி வழியாக உரும்பிராய் பகுதி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஆட்டோவை சாரதி சடுதியாக நிறுத்த முற்பட்ட போது வேகக்கட்டுப்பாட்டையிழந்து முன்னால்சென்று கொண்டிருந்த துவிச்சக்கரவண்டி ஒன்றுடன் மோதியதிலே குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த குடும்பஸ்தர் முகம் மற்றும் தலையில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தரை பிறிதொரு ஆட்டோவில் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது விபத்தை ஏற்படுத்திய ஆட்டோ வாடகைக்கு அமர்த்தி சென்றமை காரணமாக தனது ஆட் டோவை எடுக்க முயன்றபோது அப்பகுதியில் நின்றவர்களுடன் சிறு முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

மேலும் விபத்தில் சிக்கிய ஆட்டோ முன்பகுதி சேதமடைந்ததுடன் துவிச்சக்கர வண்டியும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இவ்விபத்து தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-87)

## வெள்ளம் வெளியேற வழியேற்படுத்துங்கள்



(கரணவாய்)

நெல்லியடி நகரப் பகுதியில் வடிகாலமைப்பு சீரின்மையால் வெள்ளம் பாய்ந்தோட முடியாது தேங்கி நிற்கிறது.

பருத்தித்துறை- யாழ்ப்பாண வீதியின் இருமருங்கிலும் அங்காடித் தொகுதிகளுக்கு இடைப்பட்ட பகுதியில் மழை பெய்யும் போது ஏற்படும் வெள்ளம் பாய்ந்தோட முடியாத நிலை காணப்படுகிறது.

எனவே வெள்ளம் பாய்ந்தோட முடியாது காணப்படும் இடம் குறித்து அதிகாரிகள் கவனம்செலுத்தி வெள்ளம் தேங்க முடியாதவாறு சீர் செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)



இந்திய அரசின் நிதியுதவியுடன் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் கேட்போர் கூடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த 8ஆம் திகதி நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.இந்தியத் துணைத்தூதரக தூதுவர் ஆ.நடராஜன் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வருவதையும் அடிக்கல் நாட்டப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் நடந்தது என்ன?

வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆளுநர் கூரேயிடம் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் கையளிக்கும் போது 16 உறுப்பினர்கள் உடனிருந்தனர். கையளிக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் 14 பேர் கையொப்பமிட்டிருந்தனர். இவர்களில் அமைச்சர் டெனீஸ்வரன் தவிர்ந்த ஏனையவர்கள் தமிழ ரசுக் கட்சி சார்ந்த உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பின்வரும் உறுப்பினர்கள் கையொப்பமிட்டிருந்தனர். டாக்டர் ப.சத்திய லிங்கம், இ.ஆனோல்ட், கே.சயந்தன், அ.பரஞ்சோதி, ச.சுகிர்தன், க.பசுபதிப்பிள்ளை, சீ.வீ.கே.சிவஞானம், த.குருகுலராஜா, ப.அரியரட்ணம், வே.சிவயோகன், வி.கமலேஸ்வரன், அயூப் அஸ்மின், பிரிமு சிறாய்வா, பா.டெனீஸ்வரன்.

சபை உறுப்பினர் தர்மலிங்கம் வெளிநாட்டில் இருப்பதாகவும் அவர் இத்தீர்மானத்திற்கு தனது ஆதரவு ஒப்புதலைத் தந்துள்ளார் எனவும் ஆளுநரிடம் கூறப்பட்டது.

இதுதவிர நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா மற்றும் உறுப்பினர்களான ஜெயதிலக, ஜவாகர் ஆகியோர் கையொப்பமிடாத போதிலும் தீர்மானத்தைக் கையளிக்கும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர் என்பதும் இங்கு நினைவுபடுத்தற்குரியது.

நீண்டகாலம் திட்டமிடப்பட்ட ஒரு சதிவேலை 14.06.2017 அன்று இரவுப் பொழுதில் நடந்தேறியது. இரவோடு இரவாக ஆளுநர் அலுவலகத்தில் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் ஒன்றுகூடி, ஒரு இலட்சத்து 32 ஆயிரம் விருப்பு வாக்குகளைப் பெற்று தமிழ்மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவராக விளங்கும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகக் கையளிக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தமிழரசுக் கட்சியில் விழுந்த இடி என்பதை அதுவரை யாரும் உணர்ந்திலர்.

ஒருபெரும் கொடுஞ்செயல் யாழ்ப்பாணம் பழைய பூங்கா வளாகத்தில் நடந்து முடிந்தது. தீர்மானத்தை வழங்கியவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றெல்லோரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருந்தனர். முள்ளிவாய்க்கால் நினைவுகள், வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது மேடையேறி இவர்கள் ஆற்றிய உரைகள் அனைத்தும் மறைந்து போயிற்று.

தங்களின் பரம எதிரியை சரித்து, சரித்திரம் படைத்த மனநிலையில் ஆளுநர் அலுவலகத்தை விட்டுப் பிரிய முடியாமல் உறுப்பினர்கள் புளகாங்கிதம் கொண்டிருந்தனர்.

விடிந்தால் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கொழும்பு சென்று விடுவார். புதிய முதலமைச்சர் பதவியேற்புக்கான ஏற்பாடுகளைப் பார்ப்பதுதான் மிச்சம் எனும் பெரும் புளுகில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கையளித்தவர்கள் இருந்தனர்.



ப.சத்தியலிங்கம் (இலங்கைத் தமிழரசுக்கட்சி)



த.குருகுலராஜா (இலங்கைத் தமிழரசுக் கட்சி)



பா.டெனீஸ்வரன் (ரெலோ)



சீ.வீ.கே.சிவஞானம் (இலங்கைத் தமிழரசுக் கட்சி)



இ.ஆனோல்ட் (இலங்கைத் தமிழரசுக்கட்சி)



கே.சயந்தன் (இலங்கைத் தமிழரசுக் கட்சி)



அயூப் அஸ்மின் (நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம்)



ச.சுகிர்தன் (இலங்கைத் தமிழரசுக் கட்சி)



வே.சிவயோகன் (இலங்கைத் தமிழரசுக் கட்சி)



வி.கமலேஸ்வரன் (இலங்கைத் தமிழரசுக்கட்சி)



அ.பிரிமுசிறாய்வா (இலங்கைத் தமிழரசுக்கட்சி)



அ.பரஞ்சோதி (இலங்கைத் தமிழரசுக்கட்சி)



க.பசுபதிப்பிள்ளை (இலங்கைத் தமிழரசுக்கட்சி)



அ.பசுபதி (இலங்கைத் தமிழரசுக்கட்சி)

## தமிழர் தலைவிதி எப்படியாகும்?

இவர்களின் நிலை இவ்வாறாக இருக்க இராமர் காடு செல்கிறார் என்ற செய்தி கேட்டு ஊன் உறக்கம் மறந்த அயோத்தி மாநகரத்து மக்கள் போல ஈழத்தமிழர்கள் எல்லாம் துன்பத்தில் உழன்றனர்.

என்னே கொடுமை! இச்செயல் செய்தவர்களைக் கடவுள்தான் மன்னிப்பாரோ! என்றெல்லாம் மக்கள் நொந்து கொண்டிருந்தனர்.

ஊடக நிறுவனங்களின் தொலைபேசிகள் ஒரு கணப்பொழுதும் ஓய்வின்றி ஒலித்துக்கொண்டேயிருந்தன. வந்த அழைப்புக்குப் பதில் அளித்துவிட்டு தொலைபேசியைத் துண்டிக்க அடுத்த அழைப்பு, முதலமைச்சர் விக்னேஸ்வரனைப் பதவியில் இருந்து நீக்கி விட்டார்களா?, யார் அதைச் செய்தது? செய்ய முடியுமா? விடுவோமா, விடிந்தால் நாங்கள் யார் என்பதைத் காட்டுவோம்.

இப்படியாக மக்களின் மனக்குமுறல்கள் எழுந்து கொண்டிருந்தன. இதைத் தாங்கமுடியாமல் தொலைபேசிகள் கூட அந்தரித்து அலறிக் கொண்டன என்றே சொல்லவேண்டும்.

ஓ! 14.06.2017 இரவு நடந்த நாசவேலையால் வடபுலத்துத் தமிழ்மக்கள் மட்டுமன்றி உலகம் முழுமையிலும் வாழும் ஈழத் தமிழர்களும் ஏக்கத்தோடு உறங்கிக் கொண்டனர்.

15.06.2017 ஆம் திகதி விடிகாலைப்பொழுதில் ஊடகங்கள் முழுவதிலும் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக தமிழரசுக்கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம்; ஆளுநர் கூரேயிடம் கையளிப்பு என்பதாக செய்திகள் அமைந்திருந்தன.

இச்செய்தியை வலம்புரியானது,

*தமிழரசுக்கட்சி அரசுடன் இணைந்து சதி.*

*முதலமைச்சரை நீக்கினால் வடக்கு கொந்தளிக்கும்.*

*தமிழ்மக்கள் கொதிப்பு; பொது அமைப்புக்கள் சீற்றம்*

எனப் பதிவு செய்திருந்தது.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்று சிறப்பு மிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய தீர்த்தத் திருவிழா நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது. தீர்த்தக்கேணியில் பல ஆயிரக்கணக்கான பத்தர்கள் புடைசூழ தீர்த்த உற்சவம் நடைபெற்றது. (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# அக்கராயன் குளத்தில் இருந்து குடமுறுட்டிக்குளத்திற்கு நீர் வழங்கும் திட்டம் கைவிடப்பட்டது

(பரந்தன்)

கிளிநொச்சி பூநகரி குடமுறுட்டிக் குளத்தின் கீழ் வறட்சியால் அழிவடைந்து கொண்டிருக்கும் 321 ஏக்கர் நெற்பயிரைக் காப்பதற்கு அக்கராயன் குளத்தில் இருந்து நீரினைப் பெற்றுக் கொள்வது என ஆலோசிக்கப்பட்ட போதிலும் அத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே குடமுறுட்டிக் குளத்தின் நீர் மட்டம் குறைவடைந்து சிறுபோக நெற்செய்கைக்கு நீர் விநியோகம் மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ள நிலையில் அக்கராயன் குளத்தில் இருந்து நீரினைப் பெற முடியுமா என ஆலோசிக்கப்பட்ட போதிலும் அக்கராயன் குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக்கு மட்டுமே நீர் போதுமான நிலையில் உள்ளதன் காரணமாக குடமுறுட்டிக் குளத்திற்கு மேலதிக நீர் வழங்க முடியாத நிலை இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே குடமுறுட்டிக் குளம் சிறுபோக நெற்செய்கை அழிவடைந்து கொண்டிருக்கும் நிலையில் அக்கராயன் குளத்தின் நீரையும் குடமுறுட்டிக் குளத்திற்கு வழங்கி அக்கராயன் சிறுபோக நெற்செய்கையையும் அழிவடைவதைத் தவிர்க்கும் வகையில் அக்கராயன் குளத்தில் இருந்து குடமுறுட்டிக் குளத்திற்கு நீர வழங் கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. இதேவேளை குடமுறுட்டிக் குளத்தின்கீழான நெற்செய்கைக்கான நீர் விநியோகம் மேற்கொள்ள முடியாத நிலையில் மழைவீழ்ச் சியில் தான் சிறுபோகம் காப்பாற்றுவதற்கான வழிகள் உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (2-312)




# சாட்சி இல்லாத யுத்தம் நடைபெற்றுள்ளது

## வ.மா.சபை உறுப்பினர் லிங்கநாதன் தெரிவிப்பு

(குருமன்காடு)

சாட்சி இல்லாத யுத்தம் நடைபெற்றுள்ளது. அதை இதுவரை இலக்கியமாகவோ, நேரடிஆவணமாகவோ யாரும் கொண்டு வரவில்லை என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில், அருந்ததி விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பெனில் எழுதிய ஈர நிலத்தை எதிர்பார்த்து கவிதை நூல் அறிமுக விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்மணி அகளங்கன் தலைமையில் விருந்தினர் விடுதியில் நடைபெற்ற இந் நிகழ்விற்கு புன்னகை அமைப்பு அனுசரணை வழங்கியதுடன், வன்னிப்பட்டறை இணை அனுசரணையை வழங்கியிருந்தது.

அத்துடன் இந் நிகழ்விற்கு வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா பொது வைத்தியசாலை உள நல பிரிவு உளநலவைத் தியர் வைத்திய கலாநிதி சி.சிவதாஸ், புன்னகை அமைப்பின் பணிப்பாளர் அ.சிவபால சுந்தரம், தமிழ் 'விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், செயலாளர் மாணிக்கம் ஜெகன் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## "132 நாட்கள் போதாதா வாழ்விட உரிமைக்கு உத்தரவாதமிட"

# முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக ஒன்று திரண்டனர் கேப்பாப்பிலவு மக்கள்




கேப்பாப்பிலவு மக்களின் தொடர் மண் மீட்பு போராட்டம் நேற்றுடன்132 ஆவது நாளை எட்டி தொடர்ந்து வருகின்றது. இந்நிலையில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக ஒன்று திரண்ட கேப்பாப்பிலவு மக்கள் சுலோகங்களை தாங்கியவாறு கோஷங்களை எழுப்பி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள்,

சர்வதேசமே திரும்பிப் பார் எங்கள் நிலையை எண்ணிப்பார். கேப்பாப்பிலவு பூர்வ மக்கள் நடுத்தெரு நாய்களா?, மக்கள் பிரதிநிதிகள் மக்களின் நீதியாளர்களா?, அரசின் பக்கவாதிகளா?, சம்பந்தன் ஐயா! 52 நாட்களாயும் உங்கள் முடிவு எங்கே?, நல்லாட்சி அரசே மக்கள் பிரதிநிதிகளே 132 நாட்கள் போதாதா வாழ்விட உரிமைக்கு உத்தரவாதமிட. மக்கள் பிரதிநிதிகளே! எங்கள் வாழ்வின் உரிமையின் முடிவு என்ன? நல்லாட்சி அரசே மக்கள் பிரதிநிதிகளே நாம் இலங்கை வாழ் மக்களா? வந்தேறு குடிகளா? எமக்கே புரியவில்லை ஆகிய சுலோகங்களைத் தாங்கிப் பிடித்த வாறு பேராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை 138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுக்குமாறு வலியுறுத்தி குறித்த தொடர் போராட்டம் 132 நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தமது சொந்த நிலத்தில் கால்பதிக்கும் எண்ணத்தோடு மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த எமது தொடர் போராட்டத்தை தீர்வு கிடைக்கும் வரை தாம் முன்னெடுக்கப்போவதாக மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தொடர்ச்சியாக போராடிவரும் மக்கள் இன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் நடைபெற்றுவரும் நிலையில் மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர். இவர்களை வடக்கு மாகாண முதலமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் சந்தித்து கலந்துரையாடினர்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டம் நேற்று காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் ஆரம்பமான நிலையிலேயே குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## தனியார் கல்வி நிறுவனங்கள்

# ஞாயிற்றுக்கிழமைகளில் வகுப்புக்கள் நடத்துவதற்கு விரைவில் தடை வரும்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் மயூரன் தெரிவிப்பு

(குருமன்காடு)

ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்வி நிறுவனங்களில் வகுப்புக்கள் நடத்த தடை செய்யப்படும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் தெரிவிதுள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற வவுனியா, தோணிக்கல், முத்துமாரியம்மன் ஆலய அறநெறி பாடசாலைக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பங்கு கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

ஞாயிற்றுக் கிழமைகளிலே தனியார் கல்வி நிறுவனங்களில் வகுப்புக்கள் நடைபெறுவதை தடுக்க வேண்டும் என்று கடந்த வவுனியா அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் ஒருங்கிணைப்பு குழு தலைவரிடம் இது பற்றி குறிப்பிட்டிருந்தேன்.

அதில் கலந்து கொண்டிருந்த வடக்கு மாகாண முதலமைச்சரும் கல்வி அமைச்சரும் வடக்கு மாகாண சபையிலே ஒரு நியதி சட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். அச்சட்டம் வெகு விரைவில் நடைமுறைக்கு வரும் போது முற்றுமுழுதாக ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்வி நிறுவனங்கள் நடைபெறுவதை நிறுத்தி உங்களிற்கான ஒத்துழைப்பபை வழங்குவதாக கூறியிருந்தனர். இது தொடர்பாக புதிய கல்வி அமைச்சரிடமும் நான் நினைவுபடுத்தியிருந்தேன். அதன் பயனாக இன்னும் இரண்டு மாதங்களில் வடக்கு மாகாணம் முழுவதும் நடைமுறைக்கு வரும் எனத் தெரிவித்தார். (2-250)

# கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் தேன் குளவிக் கூடுகள்

**ஆரம்பப் பிரிவிற்கு நேற்று பூட்டு**

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு வகுப்பறை கட்டடத் தொகுதி ஒன்றில் காணப்பட்ட தேன் குளவிக் கூடுகள் காரணமாக ஆரம்பப் பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் வீடுகளுக்கு அனுப்பட்டனர்.

பெரிய மூன்று தேன் குளவிக்கூடுகள் நேற்றுக் காலை அவதானிக்கப்பட்டன. இதனை தொடர்ந்து மாணவர்களின் பாதுகாப்பு கருதி தரம் நான்கு வரையான வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் மீண்டும் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அத்தோடு பிற்பகல் பாடசாலை முடிவுற்றதன் பின்னர் தேன் குளவிக்கூடுகளை அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இன்று செவ்வாய்க்கிழமை முதல் வழமைபோல் பாடசாலை இயங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் நேற்றுக்காலை 9 மணியளவில் இணைத்தலைவர்கள் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் ஆரம்பமானது. மாவட்டத்தின் இணைத்தலைவர்களான வணிக வாணிப அமைச்சர் றிசாத் பதியுதீன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், சிவசக்தி ஆனந்தன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரன், மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன், வடக்கு மாகாண பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், க.சிவநேசன், ஆ.புவனேஸ்வரன், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், திணைக்கள தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# தடைசெய்யப்பட்ட மீன்பிடியை நிறுத்தக்கோரி

# முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் கவனயீர்ப்பு





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கடற்பரப்பில் நடைபெற்று வருகின்ற சட்டவிரோத மீன்பிடி தொழில்களை தடைசெய்யுமாறு கோரி முல்லைத்தீவு மீனவர்கள் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை நேற்று முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்றுக் காலை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் ஆரம்பமான நிலையில் செயலகம் முன்பாக மீனவர்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர். இதில் ஈடுபட்டிருந்த மீனவர்கள்,

"நிறுத்து நிறுத்து சட்ட விரோதமான மீன்பிடித் தொழிலை எமது பகுதியில் நிறுத்து, தடைசெய், தடைசெய் சுருக்கு வலையைத் தடைசெய், மீன் கூட்டங்களுக்கு வெடி அடிப்பதை நிறுத்து, கடலில் வெளிச்சம் வைப்பதை தடைசெய்" ஆகிய சுலோகங்களைத் தம்முடன் தாங்கிப் பிடித்தவாறு கவனயீர்ப்பை முன்னெடுத்திருந்தனர்.

இவர்களைவடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்.

தடைசெய்யப்பட்ட தொழில்களுக்கு கடற்றொழில் நீரியல் வள திணைக்களம் மறைமுகமாக ஆதரவு வழங்குவதாகவும் தென்பகுதி மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி தொழில் அதிகரித்துள்ளதாகவும் இவற்றைக் கட்டுப்படுத்துமாறும் கோரி குறித்த போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர். (2-281)

## 'ஒரு மாத காலத்தினுள் நடவடிக்கை எடுக்கப்படும்'

# கூட்டுறவு உதவி ஆணையாளரின் வாக்குறுதிக்கு அமைவாக கவனயீர்ப்பு நேற்று கைவிடப்பட்டது





கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையத்தில் இருந்து விடுபடுவதற்கு ஒரு மாத காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் வாக்குறுதி வழங்கியதையடுத்து, கிளிநொச்சி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோரால் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

வடமாகாண பேரிணையத்தில் உள்ள தமது நிதிகளை வழங்குமாறு கோரி கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர், அங்கத்தவர்கள் ஆகியோர் நேற்று திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு டிப்போச் சந்தியில் அமைந்துள்ள கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்தின் வாயிலை முற்றுகையிட்டு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கூட்டுறவுக்குள் அரசியல் வேண்டாம், கூட்டுறவுத் திணைக்களம் அரசியல் [illegible] செயற்படு[illegible] கூட்டுறவுத் திணைக்களமே எம்மை வதைக்காதே, மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரை மாற்றும், கூட்டுறவுத் திணைக்களமே நீ இரட்டை வேடமா? அடிக்காதே அடிக்காதே அங்கத்தவர்கள் வயிற்றில் அடிக்காதே, பேரிணையமே நலத்திட்ட நிதியை எமக்குத் தா, ஒழிக ஒழிக பேரிணையமே ஒழிக" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகள் ஏந்தியிருந்ததோடு, கோசங்களையும் எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

கவனயீர்ப்பு பேராட்டத்தை தொடர்ந்து குறித்த இடத்திற்கு வருகைதந்த பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பிரச்சினைகளைக்




கேட்டறிந்ததுடன், சம்பந்தப்பட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கனகையா மதனரூபன், பொது முகாமையாளர் எஸ்.துரைசிங்கம் ஆகியோரை அழைத்து கலந்துரையாடியதைத் தொடர்ந்து, ஒரு மாத காலத்திற்குள் பேரிணையத்தில் இருந்து, கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் விலகுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என வாக்குறுதியளித்ததைத் தொடர்ந்து கனயீர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டது.

இந்த கவனயீர்பு போராட்டத்தில் கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள், பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை ஒரு மாத காலத்தினுள் வழங்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படாவிடின் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படுமென சங்கத்தின் பொது முகாமையாளர் எஸ்.துரைசிங்கம் தெரிவித்துள்ளார். (2-15-312)




புதுக்குடியிருப்பு யோகா பயிற்சி கல்லூரியின் ஏற்பாட்டில் உலக யோகா தினத்தை முன்னிட்டு யோகா பயிற்சிகள் அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 9 பாடசாலைகளைச் சேர்ந்த 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களுக்கும் 13 கிராமங்களிலுள்ள ஆயிரத்து 200 இற்கு மேற்பட்ட பொதுமக்களுக்கும் நடத்தப்பட்டதைப் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல தலைவரின் கீழ் பணியாற்றத்தயார்

## கோத்தபாய தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலில் ஈடுபடும் எவ்வித திட்டமும் கிடையாது என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நாட்டுக்கு பொருத்தமான சிறந்த தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டால் அவரின் கீழ் பணியாற்ற விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தம்மை கைது செய்யப் போவதாக தாம் கூறவில்லை என அமைச்சர் மகிந்த அமரவீர தற்போது கூறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நல்ல ஒருவரை அரசாங்கம் தெரிவு செய்ய வேண்டும் எனவும் அவ்வாறு நாட்டில் நல்ல தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவரின் கீழ் பணியாற்றத் தாம் தயார் என அவர் தெரிவித்தார். (இ-7)

# ஊவா மாகாண பதில் ஆளுநராக நிலுக்கா நியமனம்

(கொழும்பு)

மத்திய மாகாண ஆளுநர் நிலுக்கா ஏக்கநாயக்க, ஊவா மாகாண பதில் ஆளுநராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊவா மாகாண ஆளுநர் எம்.பி.ஜயசிங்க வெளிநாட்டுக்குச் சென்றுள்ளதால் எதிர்வரும் 19ஆம் திகதி வரை, ஊவா மாகாண பதில் ஆளுநராக, நிலுக்கா ஏக்கநாயக்க கடமையில் இருப்பார் என தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)



கேலிச்சித்திரம்

# அரசியலமைப்பு உருவாக்க வழிநடத்தல் குழுவின் கூட்டம் இரத்து!

(கொழும்பு)

**புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள வழிநடத்தல் குழுவின் கூட்டம் இன்று நடைபெறவிருந்த நிலையில் திடீரென இரத்துச் செய்யப்பட்டுள்ளது.**

புதிய அரசியலமைப்பினை தயாரிப்பதற்கான வழிநடத்தல் குழுவானது இடைக்கால அறிக்கை வரைவை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கான பணிகளை துரிதப்படுத்துவதற்காக பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறாத நாட்களிலும் தொடர்ச்சியாக வழிநடத்தல் குழுவின் அமர்வுகளை நடத்துவதென கடந்த வாரம் இடம்பெற்ற அமர்வுகளின் போது ஏகோபித்த இணக்கத்திற்கு வரப்பட்டிருந்தது.

எனினும் தற்போது குறித்த இணக்கப்பாட்டின் படி இன்று முதல் தொடர்ச்சியாக நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த அமர்வு தற்காலிகமாக நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் மகா சங்கத்தினர் விடுத்த அறிவிப்புக்களை அடுத்து சர்ச்சை நிலைமைகள் எழுந்துள்ளன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட முக்கிய அரசியல் தலைவர்கள் புதிய அரசியலமைப்பு உருவாக்கும் பணிகள் மக்கள்ஆணைக்கு ஏற்ப முன்னெடுக்கப்படும் என்று அழுத்தம் திருத்தமாக கூறி வருகின்றபோதும் முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவான கூட்டு எதிர்க்கட்சியினர் மகா சங்கத்தினரின் தீர்மானத்திற்கு முரணாக செயற்படக்கூடாது என்று அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றனர்.

அதேநேரம் பண்டார நாயக்க மாநாட்டு மண்டபத்தில் கடந்த மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற அரசியலமைப்பு மறுசீரமைப்பு மாநாட்டில் புதிய அரசியலமைப்பிற்கான இடைக்கால அறிக்கை வரைபு சமர்ப்பிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டதாக தினேஷ் குணவர்த்தன எம்.பி. சபையில் எழுப்பிய பிரச்சினையை அடுத்து இறுதியாக கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற வழிநடத்தல் குழுக் கூட்டத்திலும் அதுகுறித்து கடுமையான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றிருந்தன.

குறிப்பாக புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் பிரதான செயற்பாட்டாளரான ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண எம்.பி.க்கும் தினேஷ் குணவர்த்தன எம்.பி.க்கும் இடையில் இவ்வாறான கருத்து மோதல் இடம்பெற்றிருந்த நிலையில் குறித்த அமர்விலும் தீர்க்கமான விடயங்கள் எதுவும் கலந்துரையாடப்படாது நிறைவுக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 73 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

பாணந்துறைமற்றும்களுத்துறை ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில், கடந்த இரு தினங்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட வாகன சோதனை நடவடிக்கையின்போது, பல்வேறு போக்குவரத்துக் குற்றங்களை இழைத்த 173 பேருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கமைவாக, கறுப்புக் கண்ணாடிகள் பொருத்தப்பட்ட நிலையில் வாகனங்களைச் செலுத்திய 59 பேருக்கு எதிராகவும், பதிவு செய்யப்படாத நான்கு வாகனங்கள், தடைசெய்யப்பட்ட ஸ்டிக்கர்களை ஒட்டியிருந்த 89 வாகனங்கள், வெவ்வேறு விதமான ஹோர்ன் சத்தங்களை எழுப்பிய 21 வாகனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எதிர்வரும் நாட்களில் நாடளாவிய ரீதியில் இச்சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென்றும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# எந்தவொரு சவாலுக்கும் முகம்கொடுக்கத் தயார்

## மகிந்த அமரவீர அறிவிப்பு

(கொழும்பு)



அரசியலில் எந்தவொரு சவாலுக்கும் முகம்கொடுக்க தாம் தயார் என, அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

வரும் சவால்களில் வெற்றி பெற்று வலுவுடன் முன்னோக்கிச் செல்வதே தனது நோக்கம் எனவும் அவர் கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே, மகிந்த அமரவீர மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-7)

# தீப உயன சுற்றாடல் பூங்கா ஜனாதிபதியால் திறந்துவைப்பு

பொலநறுவை புனித பூமிக்கு வருகை தருவோருக்கு, சுற்றாடல் பெறுமானங்களை வெளிப்படுத்தும் வகையில் புனித நகருக்கு அருகில் உருவாக்கப்பட்ட சுற்றாடல் பூங்கா திறப்பு விழா நேற்று முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாத்துறையை மேம்படுத்தி பிள்ளைகளின் சுற்றாடல் அறிவுக்கும் பொழுது போக்குக்கும் பங்களிப்பு வழங்கும் இந்த பூங்காவை தூய்மையாகவும் சுற்றாடல் நேயமாகவும் பேணுவது அனைவரதும் பொறுப்பாகுமென சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, அதற்காக கடுமையான சட்டங்களை அமுல்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக் காட்டினார். (இ-7)

# பெருந்தொகை சிகரெட்டுக்களுடன் வர்த்தகர் கைது

(கொழும்பு)

12இலட்சத்து 50ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு தொகை சிகரெட் பெட்டிகள் கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குவைத் நாட்டுக்கு சொந்தமான விமானத்தில் நேற்று அதிகாலை நாட்டை வந்தடைந்த வர்த்தகர் ஒருவரே குறித்த சிகரெட்டுக்களை கொண்டு வந்ததாக, சுங்கப் பிரிவினர் கூறியுள்ளனர்.

மேலும், சுங்கப் பிரதிப் பணிப்பாளர் எம்.ஆர்.மிஹிர பிரியரத்னவின் உத்தரவுக்கு அமைய, சிகரெட்டுக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதோடு, சந்தேகநபருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வடக்கு, கிழக்கு, ஊவா வீதி அபிவிருத்திக்கு நிதியுதவி!

வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் வீதி அபிவிருத்தியின் பொருட்டு விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியின் கீழ் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக உயர் கல்வி மற்றும் பெருந் தெருக்கள் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்பொருட்டு 900 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவி கிடைக்கப் பெற்றுள்ளது. (இ-7)

# அரசாங்கத்திற்கு எதிராக மக்களுடன் இணைந்து வீதிக்கு இறங்குவோம்

## கம்மன்பில எச்சரிக்கை



(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்குள் நடத்தாவிடின் மக்களுடன் இணைந்து வீதிக்கு இறங்குவோம் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மொரட்டுவையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தலை நடத்துவதனை இந்த அரசாங்கம் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி வருவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும், யுத்த வெற்றியை பெற்றுக் கொடுத்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் இந்த நல்லாட்சி அரசாங்கம் கைது செய்ய முனைவதாக குற்றம் சாட்டிய அவர், அரசாங்கத்தின் இவ்வாறான அராஜக செயற்பாட்டை கண்டிப்பதாகவும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னால் வேலைநிறுத்தம் வேண்டாம்

## பேராசிரியர் கார்லோ வலியுறுத்தல்



தனக்காகவோ அல்லது தன்னுடைய பதவியின் காரணமாகவோ, நோயாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டாம் என, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்திடம் பேராசிரியர் கார்லோ பொன்சேகா கேட்டுக்கொண்டார்.

இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அனுருத்த பாதெனிய மற்றும் உதவிச் செயலாளர் டாக்டர் ஹரித ஆகியோர் நேற்று நாவலயிலுள்ள எனது வீட்டுக்கு வந்து என்னை பதவி யிலிருந்து நீங்க வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டனர்.

அரசாங்கம் உங்களை பலாத்காரமாக பதவியிலிருந்து நீங்கச் சொன்னால் அதற்காக போராட்டத்தை முன்னெடுக்க தயார் என தெரிவித்தனர்.

நான் அவர்களிடம் தாழ்மையாக கேட்டுக் கொண்டேன் எனக்காகவோ அல்லது என்னுடைய பதவியின் காரணமாகவோ போராட்டத்தில் ஈடுபட வேண்டாம்.

நான் இந்த பதவியில் 5 வருடங்கள் இருந்து விட்டேன். இருப்பினும் 6 மாதங்கள் மேலும் எனக்காக நீடிக்கப்பட்டது. இனி எனக்கு இந்தப் பதவி வேண்டாம் என, பேராசிரியர் கார்லோ பொன்சேகா தெரிவித்தார். (இ)


## விற்பனைக்கு

புறொயிலர் குஞ்சு -100/=, கழுத்து வெட்டி குஞ்சு -85/=, ஊர்க்குஞ்சு -75/=, யாழ்ப்பாணம், மானிப்பாய் ஆகிய இடங்களில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு,
077 408 1155
(9744)



1 ஆம் ஆண்டு

## நினைவஞ்சலி



பிறப்பு 1940-10-07

இறப்பு 2016-06-22

அமரர்.
N.K. முருகையா
அவர்களின்

முதலாம் வருட
திவச கிரியைகள் 11.07.2017 இன்று
செவ்வாய்க் கிழமை அவரது
இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்
தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை
தந்து பிரார்த்தனை நிகழ்விலும் மதிய போசன
நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

அருணாசலம் பாடசாலை வீதி,
அளவெட்டி

(9728)

M. கஜன்
குடும்பத்தினர்



# கேள்வி அறிவித்தல்

## நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை சபை நிதி வேலைத்திட்டம் –2017

1.“தலைவர், பெறுகைக்குழு,வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்” அவர்களால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்டஅட்டவணையில் விபரிக்கப்பட்டவாறுகோருகின்றார்.

2.தேசியபோட்டிகேள்வி கோரல் நடைமுறைக்குஅமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

3.பொதுநிர்வாகச் சுற்றறிக்கை **04/2016(i)** இற்கமைவாக வடமாகாண எல்லைக்குள் பதிவுகளைக் கொண்டவராகவும்,அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் **CIDA** பதிவுள்ளவராகவும், கறுப்புப் பட்டியலில் **(Black List)**சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

4.தேவையான தகைமைகள்,கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை **(Schedule)** பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

5.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம், பருத்தித்துறை வீதி, வல்வெட்டித்துறை (தொலைபேசி இல: -021-226 3973) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 25.07. 2017ம் திகதிவரை மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

6.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை தலைவர், வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்,பருத்தித்துறை வீதி,வல்வெட்டித்துறை எனும் இடத்திலிருந்து 11.07.2017ஆம் திகதியிலிருந்து 25.07.2017ஆம் திகதிவரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 (வரிநீங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

7.பெறுகை ஆவணங்களின் மூலப்பிரதி, இணைப்பிரதி என்பவற்றை 25.07.2017ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியவாறு “தலைவர், வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம், பருத்தித்துறை வீதி, வல்வெட்டித்துறை” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

8.கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 63 (அறுபத்திமூன்று - 26.09.2017) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

9.கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறுஅமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரிகள் நீங்கலாக மில்லியனில்) | ஒப்பந்தகாலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41 (4)/2/4/CF/17/09 | நடராஜா வீதிமற்றும் வடிகால் திருத்தம் | 1.078 | 3மாதங்கள் | C9/ C8 | 10,800.00 | 24.10.2017 |
| NP/14/41 (4)/2/4/CF/17/10 | சந்நிதி கொலனிவீதித் திருத்தம் | 0.936 | 3மாதங்கள் | C9/ C8 | 9,400.00 | 24.10.2017 |

10.கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கூட்டம் வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற மாநாட்டு மண்டபத்தில் 20.07.2017ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தங்களது சொந்தச் செலவில் கலந்துகொள்ளமுடியும். (C-9030)

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
நகராட்சிமன்றம்,
வல்வெட்டித்துறை.
10.07.2017.


# க.பொ.த.உயர்தரப் பரீட்சை அனுமதி அட்டை வழங்கல்

கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு 2017 ஆண்டில் 1ஆம், 2அம் தடவை தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் 19.07.2017ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் வழங்கப்படவுள்ளது.

மாணவர்கள் அனுமதி அட்டையை பெற வரும்போது பாடசாலைச் சீருடையில் பெற்றோருடன் சமூகமளிப்பதோடு தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்தல் வேண்டும் என அதிபர் ம.ஞானசம்பந்தன் அறிவித்துள்ளார். (இ

# லஞ்ச விவகாரம்: வைத்தியருக்கு விளக்கமறியல்

இலஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட, குளியாப்பிட்டி ஆதார வைத்தியசாலையின் வைத்திய நிபுணரையும் தனியார் வைத்தியசாலையின் கதிரியக்க தொழில் நுட்பவியலாளரையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், நேற்று உத்தரவிட்டது.

ஆய்வுகூடம் ஒன்றால் வழங்கப்பட்ட 75ஆயிரம் ரூபாய் பணத்தை ஊழியரொருவரூடாகப் பெற்ற போது, இலஞ்சம், ஊழல் தொடர்பான சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் அதிகாரிகளால், அந்த வைத்தியர் கைதுசெய்யப்பட்டார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில், தனியார் வைத்தியசாலையின் கதிரியக்க தொழில்நுட்பவியலாளரும் கைதுசெய்யப்பட்டு, இருவரும், குளியாப்பிட்டி நீதவான் நீதிமன்றத்தால், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். (இ-7)

# கல்வி அனுபவப் பகிர்வு

கனடாவிலிருந்து வருகை தந்திருக்கும் முன்னால் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் க.கந்தசாமியுடனான கல்வி அனுபவப்பகிர்வும் கலந்துரையாடலும் நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இல.249 K.K.S வீதியில் அமைந்துள்ள வடமாகாண சிரேஷ்ட பள்ளிக் கல்வியாளர் ஒன்றிய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (இ)

# கண்காட்சி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனத்தினால் பொருளாதார நிலை மாற்றத்திற்கான விசேட திறன்களை மேம்படுத்தல் எனும் கருத்திட்டத்தின் கீழ் நிலையான வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்காக கடந்து வந்த விடயங்கள், தொழிலுக்கான திறன்கள் தொடர்பான எனது கனவுகள், எனது திறன்கள், எனது பயணம் எனும் தொனிப்பொருளிலான கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை முதல் நாளை மறுதினம் 13 ஆம் திகதி வியாழக்கிழமை வரை முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை யாழ்ப்பாணம் பொதுநூலக கேட்போர்கூடத்தில் இடம்பெறும். கனேடிய உயர் ஸ்தாபகர் ஷெல்லி வைற்றிங்கால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இக்கண்காட்சியை அனைவரும் பார்வையிடலாம் என கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் யூடி.தீபன் அறிவித்துள்ளார். (இ-3-134)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# சீன- இந்திய எல்லையில் நிரந்தர இராணுவ முகாம்

## தொடரும் பதற்றம்

(டில்லி)

சிக்கிம் எல்லையில் சீனாவின் நெருக்கடிகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் டோக்லாம் பகுதியில் உள்ள இந்திய ராணுவ வீரர்கள் அங்கு நிரந்தரமாக தங்கும் வகையில் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

டோங்லாங் எல்லை பிரச்சினையில் இந்தியாவின் எந்த சமரசத்தையும் ஏற்க மாட்டோம் என்று சீனா அறிவித்தது. பிரச்சினை தொடங்கி ஒரு மாதமான பிறகும் சீனா இவ்வாறு அறிவித்துள்ளதால் அது எதற்கும் தயார் என்பது போல நடந்து கொள்கிறது.

சீனாவின் இத்தகைய நெருக்கடிகளுக்கு பதிலடி கொடுக்கும் நடவடிக்கையை கடந்த இரு தினங்களாக இந்திய இராணுவம் மேற்கொண்டுள்ளது. டோக்லாம் பகுதியில் உள்ள இந்திய ராணுவ வீரர்கள் அங்கு நிரந்தரமாக தங்கும் வகையில் கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இரவு-பகலாக 24 மணி நேரமும் டோக்லாம் பகுதியில் தங்கி இருப்பதற்கு வசதியாக அந்த கூடாரங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் அந்த கூடாரங்களில் உள்ள வீரர்களுக்கு இந்தியாவின் மற்ற பகுதிகளில் இருந்து உணவு மற்றும் ராணுவ தளபாடங்கள் எடுத்துச் செல்வதற்கான நேரடி இணைப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இவை தவிர டோக்லாம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கூடாரங்களில் இருந்து சீன வீரர்களின் ஒவ்வொரு அசைவையும் மிக, மிக எளிதாக கண்காணிக்கும் வசதியையும் இந்திய வீரர்கள் செய்துள்ளனர். இதன் மூலம் சீனாவின் எத்தகைய மிரட்டலுக்கும் பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியா தயாராக இருப்பது தெரிய வந்துள்ளது.

சீனாவின் நெருக்கடி எந்த அளவில் வந்தாலும் எதிர்கொள்ள தயார் என்பதை சூசகமாக உணர்த்தும் வகையில் அந்த கூடாரங்கள் அமைந்துள்ளன. மேலும் எத்தனை நாட்கள் ஆனாலும் நீண்ட காலம் அங்கு தொடர்ந்து தங்கி இருக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு முன்பு இந்தியா-சீனா இடையே இத்தகைய நெருக்கடி உருவானபோது தூதரக அளவில் பேசி சமரசம் செய்யப்பட்டன. இந்த தடவையும் அப்படி சமரச தீர்வு காண முயற்சிகள் நடந்து வருகின்றன.

ஆனால் சீனாவின் பிடிவாதம் காரணமாக இதுவரை சமரசம் ஏற்படவில்லை. இதைத் தொடர்ந்தே எதையும் எதிர்கொள்ள தயார் என்ற ரீதியில் இந்திய ராணுவம் கூடாரங்கள் அமைத்து நிரந்தரமாக தங்கும் பதிலடியை கையில் எடுத்துள்ளது. (3-8)



மொசூல் நகரை மீட்ட இராணுவத்தினரின் கொண்டாட்டம்.

# ஸ்டாலினுடன் ஆளும்கட்சி இரகசிய கூட்டணி

## பன்னீர்ச்செல்வம் காட்டம்



(ராமநாதபுரம்)

முதல்வர் பழனிச்சாமியும், மு.க.ஸ்டாலினும் புதிய கூட்டணி அமைத்துள்ளனர். இவர்கள் மக்கள் மன்றத்திற்கு வரும்போது, மக்களால் விரட்டி அடிக்கப்படுவார்கள் என்று ஓ.பன்னீர்செல்வம் குற்றம் சாட்டினார்.

ராமநாதபுரம் மாவட்ட அ.தி.மு.க.சார்பில் எம். ஜி. ஆர். நூற்றாண்டு விழா மற்றும் கட்சி வளர்ச்சி குறித்த செயல்வீரர்கள், வீராங்கனைகள் ஆலோசனை கூட்டம் பசும்பொன் நகர் தொண்டி வாப்பா தோப்பில் நடைபெற்ற போது முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு பேசியதாவது,

தி.மு.க. செயல்தலைவர் மு.க.ஸ்டாலின் என்னை பற்றி பல தவறான தகவல்களை பரப்பி கொண்டிருக்கிறார். அவர் பொய் சொல்வதில் அவர் தந்தை கருணாநிதி மாதிரி. இப்போது சட்டமன்றத்தில் ஆளும் கட்சியினர் மு.க. ஸ்டாலினுடன் புதிய கூட்டணி அமைத்து செயற்பட்டு வருகின்றனர்.

சட்டமன்றத்தில் ஸ்டாலினை பார்த்து சிரித்தேன் என்பதை சசிகலா என்மீது பெருங்குற்றமாக கூறினார். ஆனால் இப்போது தி.மு.க. வுடன் இரகசிய கூட்டணி அமைத்து ஆளும் கட்சி செயற்படுகிறது.

தற்போது முதல்வர் பழனிச்சாமியும் மு.க.ஸ்டாலினும் புதிய கூட்டணி அமைத்துள்ளனர். இவர்கள் மக்கள் மன்றத்திற்கு வரும் போது மக்களால் விரட்டி அடிக்கப் படுவார்கள் என்று தெரிவித்தார். (3-8)

# 18 கிளர்ச்சியாளர்கள் சுட்டுக்கொலை

## சோமாலிய இராணுவம் அறிவிப்பு

(போசாஸ்சோ)

அரசுக்கு எதிராக பல்வேறு தீவிரவாத தாக்குதல்களில் தொடர்புடைய 18 கிளர்ச்சியாளர்களை சுட்டுக்கொன்றுள்ளதாக சோமாலிய இராணுவம் அறிவித்துள்ளது.

ஆபிரிக்கா நாடான சோமாலியா வறுமை மிகுந்த நாடுகளில் ஒன்றாகும். இந்நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக அல் கொய்தா, அல் ஷபாப் ஆகிய தீவிரவாத இயக்கங்களின் ஆதரவு பெற்ற கிளர்ச்சியாளர்கள் குழு செயற்பட்டு வருகின்றது. அரசுக்கு எதிராக பல வேறு தீவிரவாத தாக்குதல் களையும் இவ் இயக்கம் நடத்தியுள்ளது.

குறிப்பாக வடக்கு பிராந்தியமான பண்ட்லாட் பகுதியில் செயற்படும் இவர்களை வேட்டையாடும்பணியில் அந்நாட்டு இராணுவம் ஈடுபட்டுள்ளது. இந்நிலையில், கடந்த நான்கு நாட்களாக நடத்திய சிறப்பு ஆபரேசனில் 18 கிளர்ச்சியாளர்கள் சுட்டுக் கொல்லப் பட்டதாகவும், கல்கலா மலைப்பகுதியில் உள்ள கிளர்ச்சியாளர்களின் முகாம்கள் அழிக் கப்பட்டதாகவும் சோமாலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

மேலும், கிளர்ச்சியாளர்களின் முகாம்களில் இருந்த ஆயுதங்கள் மற்றும் மருந்துப்பொருட்கள் மீட்கப் பட்டுள்ளதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சோமாலியா இராணுவத்திற்கு இதற்கென சிறப்புப் பயிற்சிகள் அமெரிக்காவில் அளிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-8)

## ஐ.எஸ்ஸிடமிருந்து மொசூல் நகரை மீட்ட படையினருக்கு பிரதமர் வாழ்த்து

(மொசூல்)

ஐ.எஸ். பயங்கரவாதிகளின் முற்றுகையின் கீழ் காணப்பட்ட மொசூல் நகரிலிருந்து பயங்கரவாத ஆட்சியை தோற்கடித்த படையினருக்கு ஈராக் பிரதமர் ஹைடர் அல்-அபாதி மொசூல் நகருக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நேரில் விஜயம் செய்து படையினரை சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

15 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்ட ஈராக் நாட்டின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான மொசூல் நகர், கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் ஐ.எஸ். பயங்கரவாதிகளால் கைப்பற்றப் பட்டது.

இதையடுத்து கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம், மொசூல் நகரை மீட்க அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினரின் உதவியுடன் தீவிர தாக்குதலை ஈராக் இராணுவம் ஆரம்பித்தது. அதன்படி சுமார் 9 மாத கால போராட்டத்தின் பின்னர் மொசூல் நகரம் அரசாங்கத்தின் வசமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், போரினால் சிக்கி பெரும் சேதத்துக்கு உள்ளான மொசூல்நகரில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என்று ஐ.நா. சபை மதிப்பிட்டுள்ளது. (3-8)

# உல

## பஞ்ச பூத

## பஞ்ச பூத



## கனடாவில் 180 இடங்

(ஒட்டாவா)

கனடா நாட்டின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் இடி, மின்னலுடன் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. இதனால் அந்த மாகாணத்தின் 180 இடங்களில் காட்டுத் தீ பரவி உள்ளது.

கனடா நாட்டின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு கடந்த சில நாட்களாக இடி, மின்னலுடன் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது.

இதனால் அந்த மாகாணத்தின் 180 இடங்களில் காட்டுத் தீ பரவி உள்ளது. மேலும், காற்று பலமாக வீசுவதால் தீ காட்டுப்பகுதியையொட்டி

# ஜெயலலிதாவின் தி அனைத்தும் நிறைவே

## முதலமைச்சர் பழனிச்ச

(திருச்சி)

ஜெயலலிதா அறிவித்த அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றுவோம் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் பழனிச்சாமி திருச்சியில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கும் போது,

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் அறிவித்த பல திட்டங்கள் இன்னும் நிறைவேற்றப்படாமல் உள்ளதே? என நிருபர்கள் கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜெயலலிதா அறிவித்த திட்டங்கள் அனைத்தையும் இந்த அரசு நிறைவேற்றும். ஒரு சில இடங்களில் நீதிமன்ற வழக்கு, நிலம் கையகப்படுத்துதல் உள்ளிட்ட பிரச்சினைகளால் நிறைவேற்றப்படாமல் இருக்கலாம். ஜெயலலிதா அறிவித்த அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்படும் என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.



மேலும் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது காவிரி நீர் பிரச்சினையில் சட்ட ரீதியாக போராட்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# லகை விழுங்கும் நெருப்பு

## பூதங்களாலே உலகம் இயங்கும் நிலையில்
## பூதங்களே உலகை அழிக்கவும் செய்கின்றன



### 0 இடங்களில் காட்டுத் தீ

கொலம்
மின்ன
ம் அதிக
ால் அந்த
ல் காட்டுத்

கொலம்
ப்போதும்
சில நாட்
வெப்பத்
ணப்படு

ணத்தின்
தீ பரவி
பலமாக
யொட்டி

உள்ள 20-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு வேகமாக பரவி வருகிறது. இதையடுத்து, வனப்பகுதியில் உள்ள கிராமங்களில் வசித்து வந்த 7 ஆயிரம் பேர் அங்கிருந்து பாதுகாப் பாக வெளி யேற்றப்பட்ட னர்.

தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைக்கும் படையினர் தீவிரமாக ஈடு பட்டு வருகின்றனர். உல ங்கு வானூர்திகள் மூலமும் தண்ணீர் தெளிக்கப்பட்டு தீயை அணைக்கும் முயற்சி யும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் வெப்பத் தின் தாக்கம் இன்னும் சில நாட்களுக்கு தொடரும் என்று அந்நாட்டின் வானிலை இலாகா அறிவித்து இருக்கிறது. இது அப்பகுதி மக்களை பெரும் பீதியில் ஆழ்த்தி இருக்கிறது.

காட்டுத் தீ பரவியதை யொட்டி பிரிட்டிஷ் கொலம் பியா மாகாணத்தில் 14 ஆண்டுகளுக்கு பின் முதல் முறையாக அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. (3-8)

## லண்டனில் தீ விபத்து

(லண்டன்)

லண்டன் நகரில் உள்ள கேம்டன் லாக் மார்க்கெட் பகுதியில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீயை அணைக்கும் முயற்சியில் 70-க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

லண்டன் நகரில் மிகவும் பிரபலமான கேம்டன் லாக் சந்தைக் கட்டடத்தில் நேற்று முன்தினம் இரவு பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீ விபத்து ஏற்பட்டதும் உடனடியாக தீயணைப்பு படைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

தீயை அணைக்கும் முயற்சியில் 70-க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அம்புலன்ஸ் மற்றும் மருத்துவக் குழுக்களும் விரைந்து வந்தன.

சந்தையில் உள்ள மூன்று மாடிகள் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தன. உயிரிழப்பு குறித்து இது வரை தகவல் எதுவும் இல்லை.



கட்டடத்தில் தீ கொளுந்து விட்டு எரியும் படங்கள் வேகமாக சமூக வலைத்தளங்களில் பரவியது.

தீ நீண்ட நேரம் கொளுந்து விட்டு எரிந்து கொண்டிருப்பதால் கட்டடம் வெடித்துவிடும் என்று அச்சத்தில் உள்ளதாக அப்பகுதிவாசி ஒருவர் தெரிவித்தார்.

கேம்டன் லாக் சந்தைப் பகுதி அதிக சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் இடம் என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

## மது போதையில் குடிமகன் வைத்த தீ

(மும்பை)

மராட்டிய மாநிலத்தில் குடிபோதையிலிருந்த நபர் ஒருவர் வைத்த தீயில் சிக்கி 27 மோ.சைக்கிள்கள் மற்றும் 1 லோட் ஆட்டோ ஆகியன முற்றிலும் எரிந்து நாசமா கியது.

மராட்டிய மாநிலம் புனே மாவட்டத்தில் உள்ள ஜனதா வசந்த் என்ற குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலையில் நின்று கொண்டிருந்த மோ.சைக்கிளில் ஒரு மோ.சைக்கிள் மட்டும் தீப் பிடித்துள்ளது. இதனையடுத்து, தீ வேமாக அனைத்து மோ. சைக்கிள்களுக்கும் பரவியது. குடியிருப்பு வாசிகள் வந்து தீயை அணைப்பதற் குள் 27 மோ. சைக்கிள்கள், 2 சைக்கிள்கள் மற்றும் பல ஆட் டோக்களும் எரிந்து நாசமாகின.

இத் தீ விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்து விசாரணை நடத்தினர். அப்போது, தான் குடி போதையில் ஒரே ஒரு மோ. சைக்கிள்களுக்கு தீ வைத்ததாக ஒத்துக் கொண்டுள்ளார். இதையடுத்து அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி பொலிஸார் சிறையிலடைத்தனர்.

விபத்து நடந்த இப்பகுதியில் தனக்கு யாரேனும் விரோதி என்றால் அவரது வாகனத்தை கொளுத்தும் நல்ல பழக்கம் வழக்கமான ஒன்றாக இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2015ஆம் ஆண்டு இதே போல் நடந்த ஒரு விபத்தில் 85 மோ. சைக்கிள்கள் எரிந்து சாம்பலானது குறிப்பிடத்தக்கது. (3-8)

## ன் திட்டங்கள்
## றவேற்றப்படும்
### னிச்சாமி பேட்டி



ல் நீதிம
கப்படுத்
ாகளால்
இருக்க
அனை
றப்படும்
வித்துக்

லமைச்
ரிரி நீர்
போராட்

டம் நடத்தி அதை அரசிதழில் வெளியிட வைத்தார். ஆனால் காவிரி நீர் பிரச்சினைக்காக காவிரி மேலாண்மை வாரியமும், ஒழுக்காற்று குழுவும் இன்னும் அமைக்கப்படவில்லை. இது தொடர்பான வழக்கு இன்று உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வர இருக்கிறது. அதில் தமிழக அரசு சார்பாக நமது வாதத்தை எடுத்து வைத்து வெற்றி பெறுவோம் என்றார். (3-8)

## மௌனித்தது சிரியாவின் உள்நாட்டு யுத்தம்

சிரியா நாட்டில் அரசு எதிர்ப்பாளர்களுக்கும் ராணுவத்தினருக்கும் இடையில் கடந்த ஆறாண்டு காலமாக நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரை நிறுத்த அமெரிக்கா-ரஷ்யா இடையே சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை அமலுக்குவந்தது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல்ஆசாத்தை பதவியில் இருந்து நீக்குவதற்காக கடந்த ஆறாண்டுகளாக உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. அங்குள்ள கிழக்கு அலெப்போ நகரை கிளர்ச்சியாளர்களிடம் இருந்து மீட்பதற்காக கடுமையான போர் நடந்து வந்தது. நகரின் பெரும்பான்மையான பகுதிகளை ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் படைகள் மீட்டு விட்டன.

இதற்கிடையே அலெப்போவில் போரை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், ஜனாதிபதி ஆதரவு படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே போர் நிறுத்தம் செய்வதற்காக துருக்கியும், ரஷ்யாவும் பல முறை முயற்சிகளை மேற்கொண்டன.

கிளர்ச் சியாளர்களுக்கு ஆதரவு அளித்துவரும் அமெரிக்கா இந்த முயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்து வந்தது.

இந்நிலையில், ஜேர்மனி நாட்டில் சமீபத்தில் நடைபெற்ற ஜி-20 மாநாட்டின்போது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டரம்ப்பும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புதினும் முதன்முறையாக சந்தித்துப் பேசினர்.

சிரியாவில் நடை பெற்று வரும் உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வருவது குறித்தும் ஆலோ சிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் அமெரிக்கா, சிரியா, ஜோர்தான் ஆகிய நாடுகளின் முயற்சியால் சிரியா நாட்டின் தென்மேற்கு பகுதியில் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய இருதரப்பினரையும் வலியுறுத்தும் வகையில் கடந்த 7 ஆம் திகதி அன்று புதிய போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப் பட்டது.

சிரியா ராணுவத்தினரும் அதிபருக்கு ஆதரவான தனிநபர் படைகளும், கிளர்ச்சியாளர்களும் ஆயுதங்களை துறந்து அமைதி காக்க வேண்டும் என அந்த உடன்படிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையின்படி, இப்பகுதியில் கடந்த ஆறாண்டுகளாக முழங்கிக் கொண்டிருந்த துப்பாக்கிகளும், பீரங்கிகளும் இன்று மௌனமாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

## பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்



(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் மத்திய பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. கடந்த வாரம் 6.5 ரிக்டர் அளவில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தின் பாதிப்புகள் நீங்கும் முன்னர் மீண்டும் ஏற்பட்ட நிலநடுக்கம் மக்களை பீதியில் ஆழ்த்தியது.

பிலிப்பைன்ஸ் நாட்டில் கடந்த 6-ம் திகதி 6.5 ரிக்டர் அளவில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் அனல் மின்சாரம் தயாரிக்கும் நிலையம் நாசமடைந்தது. பின்னர் ஏற்பட்ட நிலச்சரிவுகளால் பல வீடுகள் மற்றும் கடைகள் மண்ணுக்குள் புதைந்தன. இதில் இருவரின் உடல்கள் மீட்கப்பட்டன. காணாமல்போன நான்கு பேரின் உடல்களை கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்நிலையில், பிலிப்பைன்ஸ் நாட்டின் மத்திய பகுதியில் உள்ள ஆர்மோக் நகரின் அருகே நேற்றுக் காலை 9.41 மணியளவில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அந்நாட்டின் புவிசார் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நேற்றைய நிலநடுக்கமானது முன் னர் 6 ஆம் திகதி ஏற்பட்ட நிலநடுக்கத்தின் தாக்கம் என தெரியவந்துள்ளது.

ஆர்மோக் நகரில் இருந்து சுமார் 9 கிலோமீற்றர் தூரத்தில் மையம் கொண்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.4 அலகுகளாக பதிவானதாகவும், இதனால் உண்டான சேத விபரங்கள் ஏதும் உடனடியாக வெளியாகவில்லை எனவும் ஊடகங்கள் செய்தி வெளி யிட்டு வருகின்றன. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பிலுள்ளவர்கள் ஆவேசப்பட்டு பேசுவது தவறு

## மைத்திரிக்கு மகிந்த ஆலோசனை

(கொழும்பு)

தனக்கு வேண்டியவர்களைப் பழி தீர்க்கவே ஜனாதிபதி சில அமைச்சுப் பொறுப்புக்களையும், நிறுவனங்களையும் தன்னிடம் வழங்குமாறு அமைச்சரவையில் வேண்டுகோள் விடுத்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ கவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த 2 வருடங்களாக ஐ.தே.கட்சியினரிடம் குறித்த அமைச்சுக்கள் இருக்கும் வரை எமது குடும்பமும் ஆதரவாளர்களும் பழி வாங்கப்பட்டனர். சிறையில் அடைக்கப்பட்டனர். தற்பொழுது போதாமைக்கு எமது ஸ்ரீல.சு.கட்சியினரும் எமக்கு அடிக்க அமைச்சுக்களை கேட்கின்றனர்.

பொறுப்பிலுள்ள ஒருவர் அவசரப்பட்டு ஆவேசமாக இவ்வாறு பேசுவது தவறு. பொறுமையாக இருக்க தெரிந்து கொள்ள வேண்டும். பழிவாங்குவது அவ்வளவு சிறந்த ஒரு பண்பல்ல எனவும் மாத்தறை வெலி



காமம் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆலோசனை வழங்கினார். (இ-7)

# இந்திய ஆழ்கடல் ரோந்துக் கப்பலில் இலங்கை கடற்படைத் தளபதி ஆய்வு

இந்தியாவிடம் கொள்வனவு செய்யப்படும், ஆழ்கடல் ரோந்துக் கப்பலை அதிகாரபூர்வமாக இலங்கையிடம் கையளிக்கப்படுவதற்கு முன்னதாக இலங்கை கடற்படைத் தளபதி அதனை இறுதிக்கட்ட ஆய்வுக்கு உட்படுத்தினார்.

சவுதி அரேபியாவுக்கான பயணத்தை மேற்கொண்டிருந்த இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜே குணவர்த்தன அங்கிருந்து இந்தியாவுக்குச் சென்றிருந்தார்.

அவருடன் இலங்கை கடற்படை அதிகாரிகள் குழுவொன்றும் இந்தியா சென்றிருந்தது.

இவர்கள் கோவாவில், கட்டும் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் சோதனையோட்டங்களில் ஈடுபட்டுள்ள பி-623 என்ற தொடரிலக்கமிடப்பட்டுள்ள எஸ்.எல்.என்.எஸ்.சயுரால என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பலைப் பார்வையிட்டு, அதன் திறனைப் பரி சோதனைக்குட்படுத்தியுள்ளனர்.

இலங்கையிடம் அதிகாரபூர்வமாக கையளிப்பதற்கு முன்னதாக இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-7)

# பௌத்த பீடாதிபதிகளை கூட்டமைப்பு உடனடியாகச் சந்திக்காது- சுமந்திரன்



(கொழும்பு)

பௌத்த பீடாதிபதிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடனடியாகச் சந்திக்காது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு மாற்றம் தொடர்பாக விளக்கமளிப்பதற்கு பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திக்கவுள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று வெளியிட்டிருந்தது.

இதுகுறித்து, கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள சுமந்திரன் "புதிய அரசியலமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கை வெளிவரும் முன்னர், மகா சங்கத்தினரைச் சந்திப்பதில் அர்த்தமில்லை.

எனவே, இடைக்கால அறிக்கை வெளிவந்ததும் அதிலுள்ள சரத்துகளைத் தெளிவுபடுத்தும் நோக்கில் மகாநாயக்கர்களைச் சந்திக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்திருக்கிறது" என தெரிவித்துள்ளார். (இ-7)

# அரசிற்கு வழங்கிய அவகாசம் 14 ஆம் திகதியுடன் நிறைவு

அரசாங்கம் ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வராத பட்சத்தில் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ள தொழிற்சங்க போராட்டத்தை எதிர்வரும் 14 ஆம் திகதி மீண்டும் முன்னெடுக்கப் போவதாக பெற்றோலிய வளத்துறை தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது. ஒன்றியத்தின் இணைப்பாளர் டி.ஜே.ராஜகருணா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

திருகோணமலையிலுள்ள எண்ணெய் களஞ்சியப்படுத்தும் தாங்கிகள் தொகுதியை இந்திய நிறுவனத்திற்கு கையளிப்பதை தடுப்பது உள்ளிட்ட கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்தே இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி பணிப்பகிஷ்கரிப்பு தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கவிருந்த போதிலும் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் எமது தீர்மானத்தை 14 ஆம் திகதி வரை தற்காலிகமாக ஒத்திவைத்ததாகவும் இணைப்பாளர் மேலும் கூறியுள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### தாக்குப்பிடிக்கும் தன்மையுண்டா?

எத்தனையோ விதமான பிரச்சினைகளை நாம் தினம் தினம் சந்திக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இன்றைய வாழ்க்கை முறை அப்படி.

எதற்குப் போனாலும் அங்கே நமக்கு முன் பத்துப் பேர்! எதில் தலையிட்டாலும் அதைக் கெடுக்கவும் முறியடிக்கவும் அங்கே நான்கு பேர்; இதனால் எத்தனையோ எதிர்ப்புகளையும் போட்டிகளையும் நாம் சமாளித்தாக வேண்டியிருக்கிறது.

பிரச்சினைகள் இன்ன வகைதானா? என்று அடக்கி விட முடியாதபடி இன்னும் விதவிதமான பிரச்சினைகள்.

இவற்றையெல்லாம் ஈடுகொடுத்துத் தாக்குப் பிடிக்கிற தன்மையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

சிறு பிரச்சினைகள் என்றால் கூட உடனே கீழே விழுந்த முட்டையைப் போலவும் கண்ணாடியைப் போலவும் மனம் உடைந்து சிதறிப் போகிறார்கள் மனிதர்கள்.

இக் குறையை நாம் வென்றாக வேண்டும். இது ஒரேநாளில் கைவரப் பெறும் நிலை அல்ல. ஆனால், வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று உறுதியாக முடிவு செய்து அன்றாடம் வளர்த்துக் கொண்டு வருகிறேன்; வளர்துக் கொண்டு விட்டேன் என்று வெளியிலும் மனதிற்குள்ளும் சொல்லி வந்தால் போதும்.

மனத்தை உறுதியாக்கிக் கொண்டால் எந்தத் துன்பத்தையும் வாய்யா மிஸ்டர் பிரச்சினை! உன்னை என்ன செய்கிறேன் பார்! என்று சவால் விட்டு அழைக்கலாம்.

பணக் கஷ்டத்தைத் தாக்குப் பிடிப்பது முதலாவது சாதனை. எவ்வளவோ துன்பத்திலும் சிரித்தபடியும் - ஏன் நேர்மையுடனும் இருக்கிறார்களே. இவர்களைக் கண்டால் நமக்கு வியப்பு ஏற்படவில்லையா? நம்மாலும் இது சாத்தியம். மத்தளத்திற்கு இரு பக்கமும் இடி என்கிற கதையாய் பல நேரங்களில் வேண்டப்பட்ட அல்லது கடமைப்பட்ட இரு தரப்பாரின் தொந்தரவுகளைத் தாக்குப் பிடிக்க வேண்டி வரும். இது இரண்டாவது சாதனை.

அன்றாட வாழ்வில் சில நடைமுறைகளைத் தொந்தரவுகளைத் தாக்குப் பிடிப்பது அடுத்த சாதனை. செய்து வரும் தொழிலில் - அல்லது வேலையில் சில இடைஞ்சல்கள் என்றால் தொழிலையோ வேலையையோ தூக்கி எறிந்து விடுகி றார்கள். எல்லாத் தொழிலிலும் வேலையிலும் சிரமங்கள் உண்டு. தாக்குப் பிடித்துத் தான் பார்ப்போமே என்கிற குணம் கிடையாது. இதனால் மேலும் அவதி தானே!

எறும்பு கடிக்கெல்லாம் குதிப்பதை விட்டு விட்டு பாம்புக் கடிக்கெல்லாம் நாம் பழகிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இந்தக் காலத்தில் வாழ்க்கைச் சக்கரத்தைச் சுழற்றப்படாது பாடுபட வேண்டிவரும்.

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நுளம்புகளை வேட்டையாட வருகின்றன 'டொக்ஸொரின் கைட்ஸ்' எனும் மிகப்பெரிய நுளம்புகள்

(கொழும்பு)

நாட்டில் தற்போது டெங்கு நோயின் தாக்கம் கடுமையாக அதிகரித்துள்ள நிலையில் அதனை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக உயர்ந்து கொண்டே செல்கிறது. தற்போதைய நிலைமையில் நாடளாவிய ரீதியில் 80 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் அடையாளம் கா்ணப்பட்டுள்ளதுடன் 230 பேர் டெங்கு நோய் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

அத்துடன்வைத்திய சாலைகளிலும் டெங்கு நோயாளர்கள் நிறைந்து காணப்படுவதுடன் இட நெருக்கடியும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக எழுந்துள்ள நிலையில் அரசாங்கம் புதுவிதமான திட்டமொன்றை தற்போது நாட்டில் அறிமுகப்படுத்தவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதாவது டெங்கு நுளம்புகளை உணவாக எடுத்துக் கொள்ளும் மற்றுமொரு உருவத்தில் பெரிய அளவிலான நுளம்பு வகையை சூழலில் உலாவ விடுவதன் மூலம் டெங்கு நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான பரிசோதனைகள் தற்போது முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் சார்பில் வைத்திய நிபுணர் சாகரிக்கா சமரசிங்க சர்வதேச ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இந்தப் பரிசோதனை மிகவும் பரபரப்பின்றி மௌனமான முறையில் முன்னெடுக்கப்படுகிறது. இதில் நாங்கள் விளம்பரத்தை தேடவில்லை. நாம் பரிசோதனையின் நிமித்தம் இந்த நுளம்புகளை பல்வேறு பிரதேசங்களில் உலாவ விட்டோம். இருளுக்கு சாபம் விடாமல் மெழுகு திரியொன்றையாவது கொளுத்த வேண்டும் என்ற எண்ணக்கருவின் அடிப்படையிலேயே இதனை நாங்கள் முன்னெடுக்கின்றோம். நீண்டகால ரீதியில் டெங்கு நுளம்புகளை அழிப் பதற்கு இது ஒரு சிறந்த முறை யாகும். இந்த மிகப் பெரிய நுளம்பின் பெயர் "டொக்ஸொரின் கைட்ஸ்" ஆகும். இந்த நுளம்பு உருவாகி ஆரம்ப காலத்தில் மட்டுமே டெங்கு நுளம்புகளை உணவாக உட்கொள்ளும்.

அதன் பின்னரும் கூட மனிதனின் இரத்தத்தை உறிஞ்சாது. மாறாக பூவிலுள்ள தேனை உறிஞ்சிக்குடிக்கும். அத்துடன் இலை போன்றவற்றையே உட்கொள்ளும். நுளம்புகளை கொல்லும் நுளம்பு என்றே இதனை ஒரு சிலர் அறிமுகப்படுத்துகின்றனர். இதனால் ஒருபோதும் மனிதனை குத்தி இரத்தத்தை குடிக்க முடியாது. காரணம் அதன் கொடுக்கானது முன்பக்கமாக வளர்ந்து பின் பக்கம் திரும்பியிருக்கும். எனவே அதனால்மனிதனை குத்தி இரத்தத்தை குடிக்க முடியாது என்று வைத்திய நிபுணர் கூறியிருந்தார்.

தற்போது இந்த நுளம்புகள் பேராதனை தாவரவியல் பூங்கா, மீரிகம குண்டசாலை ஆகிய பிரதேச சூழல்களில் உலாவ விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

"எப்படியிருப்பினும் இந்த நுளம்புகளிலிருந்து மட்டும் நாம் டெங்கு நுளம்புகளை அழித்து விட முடியாது. எமது சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதன் மூலமும் டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களை அழிப்பதன் மூலமுமே கட்டுப்படுத்த முடியும். இதனை மக்கள் மனதில் கொள்ள வேண்டியது அவசியம்" என்றும் மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் சார்பில் வைத் திய நிபுணர் சாகரிக்க சமரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை இது தொடர்பில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவிக்கையில்,

எமது மருத்துவ ஆய்வு நிறுவனம் இது தொடர்பில் பரிசோதனை செய்து வருகிறது. இந்த மிகப்பெரிய அளவிலான நுளம்பானது இலைகளை உணவாக உட்கொள்வதுடன்பூக்களிலுள்ள தேனை உறிஞ்சிக்குடிக்கும். அதன் பின்னர் இந்த பெரிய நுளம்புகள் மேலும் நுளம்புகளை உற்பத்தி செய்யும். அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நுளம்புகள் தமது வாழ்க்கையின் ஆரம்ப கட்டத்தில் டெங்கு நுளம்புகளை உணவாக உட்கொள்ளும். எனவே இதன் மூலம் டெங்கு நுளம்புகளை கட்டுப்படுத்த முடியும்.

கேள்வி : இந்த நுளம்புகள் மனிதனின் இரத்தத்தை குடிக்காதா?

பதில் : இல்லை. ஆய்வுகளின் மூலம் இந்த நுளம்புகள் மனிதனை குத்தி இரத்தத்தை உறிஞ்சாது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கேள்வி : வேறு நாடுகளில் இந்த முறைமை பின்பற்றப்படுகின்றதா?

பதில் : ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இந்த முறைமை பின்பற்றப்பட்டு வருகிறது. இது வெற்றியும் அளித்துள்ளது.

கேள்வி : இந்த நுளம்புகள் வெளிநாடுகளிலிருந்தா கொண்டுவரப்படுகின்றன?

பதில் : அவ்வாறு தான் முதலில் எண்ணினோம். ஆனால் சிங்கராஜவனத்தில் தேவைக்கு அதிகமாகவே இந்த நுளம்புகள் காணப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இரத்தப்பரிசோதனை கட்டணம் தொடர்பில் உத்தரவு மீறப்பட்டுள்ளதா என விசாரணை

(கொழும்பு)

தனியார் வைத்தியசாலைகள் மற்றும் ஆய்வு கூடங்களில் இரத்தப் பரிசோதனை கட்டணம் குறித்த உத்தரவு மீறப்பட்டுள்ளதா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட உள்ளது.

சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன இதனை தெரிவித்துள்ளார். டெங்கு நோய் தாக்கம் காரணமாக, இரத்தப் பரிசோதனை கட்டணங்களை குறைக்குமாறும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் வரையில் கட்டணத்தை அதிகரிக்க வேண்டாம் எனவும் சுகாதார அமைச்சு கோரியிருந்தது.

சில தனியார் வைத்திய சாலைகள் மற்றும் ஆய்வு கூடங்கள் இரத்தப் பரிசோதனை க்காக கூடுதல் கட்டணத்தை அறவீடு செய்வதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இவ்வாறு அரசாங்க உத்தரவினை மீறி கட்டணத்தை அறவீடு செய்யும் தனியார் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மேலும் எச்சரித்துள்ளார். (இ-7)

# இலங்கையில் மீண்டும் அனர்த்த எச்சரிக்கை

## அவதானமாக செயற்படுமாறு அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அனர்த்த நிலைமைகள் ஏற்படும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

அகலவத்தை பிரதேசத்தில் மண்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனமும் எச்சரிக்கை விடுத்துள்ளதுடன் மண் சரிவு தொடர்பில் அவதானமாக இருக்குமாறு தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமும் கோரியுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அகலவத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் கடும் மழை பெய்துள்ளதன் காரணமாகவே மண்சரிவு தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் அகலவத்தை பிரதேசத்தில் 100 மில்லி மீற்றர் வரையிலான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவி இயக்குநர் பிரதீப் கொடிப்பிலி கூறியுள்ளார்.

இதேவேளை குக்குலே கங்கையின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதன் காரணமாக அதனை அண்டிய பிரதேச மக்களையும் அவதானமாக செயற்படுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அதேவேளை மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் மழை பெய்யும் எனவும், தென் மாகாணம் மற்றும் பிபில பிரதேசத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# உமாஓயா பாதிப்பை ஆராய மகிந்த அணியின் குழு நியமிப்பு

## தலைவராக சமல் ராஜபக்ஷ



உமா ஓயா திட்டம் ஏற்படுத்தியுள்ள பாதிப்பை ஆராய்வதற்காக மகிந்த அணியான பொது எதிரணியின் உறுப்பினர்களைக்கொண்ட குழுவொன்றுநியமிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் தலைமையில் இயங்கவுள்ள இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பத்ம உதய சாந்த குணசேகர, ரஞ்சித் சொய்சா மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுவார்கள்.

உமா ஓயா திட்டம் ஏற்படுத்தியிருக்கும் பாதிப்பு தொடர்பில் ஒருசாரார் முன்னைய அரசின் மீது குற்றஞ்சுமத்தி வருவதால் அது தொடர்பில் ஆராய்வதற்காகவே இந்தக் குழு நியமிக்கப்பட்டிருப்பதாக பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி சிசிர ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

மொனராகலைக்கும் அம்பாந்தோட்டைக்கும் நீர் விநியோகத்தை மேற்கொள்ளும் நோக்கில் முன்னைய அரசால் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தில் குறைகள் எதுவும் ஏற்பட சாத்தியங்கள் இல்லை எனவும் அவ்வாறு ஏற்பட்டிருந்தால் அது தற்போதைய அரசின் கவனக்குறைவாலேயே ஏற்பட்டிருக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வரிச் சட்டத்திற்கு எதிராக வழக்கு

## கூட்டு எதிரணி நடவடிக்கை

(கொழும்பு)

உத்தேச உள்நாட்டு வரிச் சட்டத்திற்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளதாக. மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க் கட்சியினர் உத்தேசித்துள்ளனர்.

இதன்படி இன்று குறித்த உத்தேச சட்டத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்படவுள்ளது.

அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று சமர்ப்பிக்கப்படும் என முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஐ.தே.க.சார்பில் களமிறங்கும் பத்தாயிரம் உறுப்பினர்கள்

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் பத்தாயிரம் பேர் விண்ணப்பம் செய்துள்ளனர்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இவ்வாறு பெரும் எண்ணிக்கையிலானவர்கள் விண்ணப்பம் செய்துள்ளதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்த விண்ணப்பங்கள் எதிர்வரும் நாட்களில் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட உள்ளது.

விண்ணப்பப்படிவங்கள் தொடர்ந்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருவதாகவும் தேர்தல் திகதி அறிவிக்கப்படும் வரையில் அவை ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யாழ்.கல்வி வலய மாணவர் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு நேற்றையதினம் வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக கிருபா லேணர்ஸ் உரிமையாளர் சு.கிருபாகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.









வறுமை தொடர்பாக வறுமை ஒழிப்புக்கான தெற்காசிய கூட்டமைப்பின் அறிக்கை மற்றும் மீன்பிடி காணி, வனம், வளங்கள் தொடர்பான தன்னார்வ வழிகாட்டி தமிழ் கைநூல் வெளியீடு நேற்றைய தினம் யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.சிவநாதன், பேராசிரியர் சூசை ஆனந்தன், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய இணைப்பாளர் ஹர்மன் குமார, பிரஜா அபிலாஷை வலையமைப்பின் பிரதிநிதிகள், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடமாகாண இணைப்பாளர் அன்டனி யேசுதாசன், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் இன்பநாயகம் மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.(படங்கள்:- சோபிகா)

# புதிய அரசியலமைப்பு இரு பிரிவின் அனுமதி



புதிய அரசமைப்புக்கு, மகாநாயக்க தேரரினதும் மக்களதும் அனுமதி தேவை என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக, நேற்று முன்தினம் தெரிவித்தார்.

புதிய அரசமைப்பைப் பொறுத்தவரை, அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்போகின்றது என்பது தொடர்பாக, அவர் உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல்வேறு அரசியல் கட்சிகள், அரசியல் ஆதாயம் தேடுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. எவ்வாறாயினும், புதிய அரசமைப்புகான இறுதி நாளன்று, மகாநாயக்க தேரர் மற்றும் மக்களிடம் அனுமதி கோரப்படும் என்று அவர் கூறினார்.

"அரசமைப்பின் மூலம், பௌத்த மதத்துக்குக் கொடுக்கப்பட்ட உறுதி, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீளப் பெறுக் கொள்ளப்பட மாட்டாது" என்றும் அவர் இதன்போது உறுதியளித்தார்.

இந்த புதிய அரசமைப்புக் குறித்து விளக்கமளிப்பதற்காக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், கூட்டாக மகாநாயக்க தேரரை, வெகு விரைவில் சந்திப்பர் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# அரசியல் சாசனம் அமைக்கும் பணிகளை கைவிட முடியாது

## ஐ.தே.க.உறுதி



அரசியல் சாசனம் அமைக்கும் பணிகளை கைவிட முடியாது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகம் சிறிகொத்தவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இதனைத் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் சாசனத்தை உருவாக்குவது தேர்தல் வாக்குறுதிகளில் முக்கியமானது என குறிப்பிட்டுள்ள அவர் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மீறிச் செயற்பட முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

அனைவரும் அரசியல் சாசனத் திருத்தங்களை விரும்புவதாகவும் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள், அமைச்சர்கள் அரசியல் சாசனத் திருத்தங்களை விமர்சனம் செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

அவ்வாறு அரசியல் சாசனம் அமைப்பதனை விரும்பாவிட்டால் அவர்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேறிச் செல்ல முடியும் என முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். (இ-7)

# அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்தினால் நாட்டின் வளர்ச்சிக்கே பெரும் பாதிப்பு

## மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டில் முன்னெடுக்கப்படும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்தினால் அது நாட்டின் வளர்ச்சிக்கே பெரும் பாதிப்பாக அமையும் என முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசாங்கம் அபிவிருத்தியில் குளறுபடி செய்யும் வேளை எனது குடும்பத்தை பழிவாங்குகின்றது. எனது மகன்மார், சகோதாரர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். ஆகவே இந்த வைராக்கியமான் அரசியலை கைவிடுங்கள். அதுதான் நல்லது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் முன்னெடுக்கப்படும் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்துவதன் ஊடாக நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் பாதிப்புகள் ஏற்படக் கூடும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி எதிர்காலங்களில் மேலும் அதிகரிக்கும். அபிவிருத்தி திட்டங்களுக்கு மக்களின் எதிர்ப்புகள் வருவது சகஜமாகும். எனினும் அதற்கான அபிவிருத்திகளை நிறுத்தினால் அது பெரும் பாரதூரமான சிக்கலாக மாறும்.

முன்னைய காலங்களில் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தப்பட்டு [illegible] யின் காரணமாக நாடு இன்னும் இந்த நிலைமையில் உள்ளது. எனினும் எனது ஆட்சிக்காலத்தில் அவ்வாறு காலம் கடந்த அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பித்து நிறைவு செய்தேன்.

ஆனால் தற்போதைய அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்தி வருகின்றது.

மின்கலம் உட்பட இயந்திரங்கள் இயங்காத வாகனமொன்றை ஒருவர் பெறும் போது அவர் அதனை கட்டியெழுப்புவது பெரும் சிரமமானதாக மாறும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நாட்டின் அனைத்து மக்களும் ஒரேவிதமாக நடத்தப்பட வேண்டும்

## சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு



நாட்டின் அனைத்து மக்களும் ஒரே விதமாக நடத்தப்பட வேண்டுமென சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். இன, மத மற்றும் மொழி அடிப்படையில் மக்கள் பிரித்துப் பார்க்கப்படக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் அனைத்து மக்களுக்கும் சமவுரிமைகள் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அலுத்கம பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸாருக்கு எதிராக

# ஆறு மாதங்களில் 600 முறைப்பாடுகள்

## ஆரியதாஸ குரே தகவல்

(கொழும்பு)

இவ்வருடத்தின் கடந்த ஆறு மாத காலப்பகுதியில் பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில் 600 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் செயலாளர் ஆரியதாஸ குரே தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் தற்பொழுது வரை விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த வருடத்தில் (2016) மாத்திரம் பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில் 1800 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. இந்த முறைப்பாடுகள் தொடர்பில் பெரும்பாலானவை விசாரணை நடத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இலங்கையின் நிலைப்பாடு குறித்து கட்டாருக்கு தெளிவுபடுத்தினார் ரவி



கட்டார் அமீர் ஷேக் தமீம் பின் ஹமத் அல் தானி மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கட்டார் அல் பத்ர் மாளிகையில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இ[illegible]நாடு உறவுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்ட அதேவேளை அனைத்து துறைகளிலும் உறவுகளை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. விசேடமாக அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான உறவுகளை அதிகரிப்பது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வளைகுடா நெருக்கடி நிலைமை தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. ஆக்கபூர்வமான உரையாடல் மூலமே குறித்த நெருக்கடிக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்ற இலங்கையின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க இதன்போது வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## ஜனாதிபதி மாளிகை சுற்றி வளைப்பு

ஜனாதிபதி மாளிகையை சுற்றி வளைக்கப் போவதாக அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய நட்டஈட்டு நிலுவைத்தொகை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னதாக வழங்கப்பட வேண்டும் அவ்வாறு இல்லையெனில் ஜனாதிபதி மாளிகையையும் விவசாய அமைச்சினையும் சுற்றி வளைக்கப் போவதாக அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

ஹிங்குராக்கொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏப்ரல் மாத நட்டஈட்டுத் தொகையான 10,000 ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மூன்று மாத காலத்திற்கான நட்டஈட்டு நிலுவைத் தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது. எனினும் நட்டஈட்டு நிலுவைத் தொகை இதுவரையில் செலுத்தப்படவில்லை. எங்களை கொழும்பிற்கு வர வைக்க வேண்டாம் என ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றோம் என நாமல் கருணாரட்ன தெரிவித்துள்ளார். (இ-7)

## சந்தையில் போலி டிக்கெட்; பூஜிதவிடம் முறைப்பாடு

சந்தையில், போலி லொத்தர் டிக்கெட்டுகள் விற்பனை செய்தமை தொடர்பான முறைப்பாடொன்றை, நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம், பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைத்துள்ளது.

தங்களுடைய இயக்கத்துக்கு, சீட்டிழுப்பு தொடரிலக்கம் மற்றும் பாதுகாப்புக்கான சின்னங்கள் போன்றவை அச்சிடப்படாத நிலையில், குறிப்பிட்ட சில டிக்கெட்டுகள் கிடைக்கப்பெற்றதாக, நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரன்ஜித் விதானகே தெரிவித்துள்ளார்.

எனவே, குறிப்பிடப்பட்ட டிக்கெட்டுகள், சந்தையில், போலியான முறையில் விற்பனை செய்யப்படுவதாக சந்தேகம் எழுந்துள்ளதாக, குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரட்டை ஒப்பந்தங்களை மேற்கொண்டு, பணம் சம்பாதிக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் கும்பல் செயற்பட்டு வருகின்றதா என்பது தொடர்பாக ஆராயுமாறு பொலிஸ்மா அதிபரிடம்முறைப்பாட்டாளர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

தேசிய லொத்தர் சபையில், முறைகேடுகள் இடம் பெறுவதாக, கடந்த வாரத்தில், ஒன்றிணைந்த எதிரணியினர் குற்றஞ்சாட்டியிருந்தனர். 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட கொள்முதல் அறிக்கையின் பிரகாரம், கொள்முதல் செயல் முறையை மீறிய முறையிலேயே, டிக்கெட்டுகள் அச்சிடப்பட்டுள்ளதை, தேசிய லொத்தர் சபையின் கணக்காளர் வெளிப்படுத்தியுள்ளார் என்று, ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்திருந்ததோடு, அது தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்குமாறு கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கழிவு முகாமைத்துவம் குறித்து கொழும்பில் விசேட கருத்தரங்கு

கழிவு முகாமைத்துவம் மற்றும் டெங்கு கட்டுப்பாடு குறித்து உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், மாகாண சபை பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிஅமைச் சின் செயலாளர் தலைமையில் இடம் பெறவுள்ளது.

மேலும் இக்கருத்தரங்கில் திண்மக் கழிவு தரம் பிரித்தல் மற்றும்டெங்குகட்டுப்பாடுமுறைமைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது.(இ-10-102)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1128

Search for people, places and things Nagendram Home

### கருணா




### சகாதேவன்

பிஞ்ச தோச எனக்கு வேணாம்னு சண்ட போட்டு பிய்யாத நல்ல தோசயா வாங்கிட்டேன்...

இப்போ நீ இத பிக்காம திங்கனும்னு பக்கத்துல தோசக்கரண்டியோட அம்மா...

### குமாரி

பசங்க ஏன் கண்ணுல படுற எல்லா பிள்ளைகளையும் சைட்அடிக்கிறாங்க தெரியுமா?...



எந்தப் பிள்ளை மனசுலையும் தாழ்வு மனப்பான்மையும் வந்துவிடக் கூடாதுன்னுதான்...

### தனுஸ்

மனைவியிடம் கோபப்படுங்க...




ஆனா அதுக்கு முன்னால சோத்தை தின்னிடுங்க. இல்லைன்னா பிறகு கிடைக்காது...

### பிரசாந்த்




### ஆர்த்தி

காதில எண்ணெய் தடவினா கொசு கடிக்காது... எப்படி...?



கொசு வந்து உட்கார்ந்தா வழுக்கிடும்ல...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மெற்றோ பரப்புப் (Metro Area) போக்குவரத்தும் புகையிரதப் பாதை விரிவாக்கமும்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

காங்கேசன்துறைக்கும் பருத்தித்துறைக்கும் இடைப்பட்ட புகையிரதப் பாதையின் தூரமும் அண்ணளவாக 16 கி.மீற்றராக இருக்கின்றது. இப்பாதை காங்கேசன்துறையிலிருந்து பலாலி, வள லாய், தொண்டைமானாறு கடல்நீர் ஏரியை கட்ந்து பின் கெருடாவில் தனக்காரக்குறிச்சி, கொற்றாவத்தை வதிரி அல்வாய் தெற்கு ஊடாக புலோலியை அடையும் இப்பாதை அமைக்கப்படுவதன் மூலம் பலாலி விமானநிலையம், அச்சுவேலி, செல்வச்சந்நிதி , உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, நெல்லியடி பருத்தித்துறை, வரணி ஆகிய முக்கிய குடியிருப்புக்கள் புகையிரத சேவை வசதிகளைப் பெறும்.

· மேலும் இக்குடியிருப்புக்கள் யாழ்ப்பாண நகருடன் புகையிரதப் பாதை இணைப்பைப் பெறும். இதனால் யாழ்ப்பாண மெற்றோ பரப்பிலுள்ள எல்லா முக்கிய நகரங்களும் ஒரு சுற்றுப்புகையிரத பாதையில் கொண்டுவரப்படுகின்றன.

காங்கேசன்துறைக்கும் பலாலி விமான நிலையத்துக்குமிடையே முன்னர் புகையிரதப் பாதை இருந்தது. பின்னர் கைவிடப்பட்டது என அறியக்கிடக்கின்றது. அலுப்பாந்தித் துறைமுகத்திற்கும் யாழ்ப்பாண புகையிரத நிலையத்துக்கும் இடையே புகையிரதப்பாதை இருந்து பின்னர் கைவிடப்பட்டது.

2016/2017 வரவு செலவு திட்டத்தில் காங்கேசன் துறைக்கும் பொன்னாலைக்கும் இடையில் புகையிரதப் பாதை அமைக்க சாத்தியவள ஆய்வு மேற்கொள்ள 25 மில்லியன் ரூபா ஒதுக்குவதாக அறிவிக்கப்பட்டது.

இத்திட்டம் சிறுவர் மகளிர் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் முயற்சியால் முன்னெடுக்கப்பட்டது.

இத்திட்டம் இன்று என்ன நிலையில் இருக்கின்றது என்பது தெரியவில்லை. எனினும் யாழ்ப்பாண மெற்றோ பரப்பில் புகையிரத பாதைகள் நீடிப்பு மிகவும் வரவேற்கத்தக்கது. காங்கேசன்துறை-பொன்னாலை புகையிரதப்பாதை அமைக்கப்பட்டால் சில காலத்தின பின்னர் இப்பாதை துருத்துப்பிட்டி தீவு வழியாக காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் விஸ்தரிக்க முடியும். காங்கேசன்துறை- பொன்னாலை புகையிரதப் பாதை நிறைவேற்றுப்படின் இதன் மூலம் மாதகல், திருவடிநிலை, ஜம்புகோளப்பட்டினம், பொன்னாலை குடியிருப்புக்கள் சிறப்பாகவும் காரைநகர், வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பொதுவாகவும் நன்மையடைவர்.





யாழ்ப்பாண மெற்றோ புகையிரதப் பாதைத் திட்டம்

யாழ்ப்பாண மெற்றோ பரப்பின் போக்குவரத்து மேம்பாட்டுக்கு முன்மொழியப்பட்ட மூன்று புதிய புகையிரதப் பாதைகள் பின்வருமாறு,

கொடிகாமம்- பருத்தித்துறை

க்காங்கேசன்துறை- பருத்தித்துறை

காங்கேசன்துறை-பொன்னாலை (முதல் நிலையில்)

பின்னர் பொன்னாலை- ஊர்காவற்றுறை வரை விஸ்தரிக்க முடியும்.

முன்மொழியப்பட்ட புகையிரதப் பாதைகள் செல்லும் வழி ஒரு சமதரையாக இருப்பதால் பாதையமைப்பு இலகுவானதுடன் ஒப்பீட்டு ரீதியில் செலவு குறைவாக இருக்கும். இப்பாதையில் பெரிய பாலங்களோ அல்லது சுரங்கங்களோ அமைக்க வேண்டிய நிலையில்லை. இப்பாதைகள் செல்லக்கூடிய நிலங்கள் தற்பொழுது தரவையாக, ஆழமற்ற கடல்நீர் ஏரிப்பரப்பாக, கலட்டுக் காணிகளாக, நெல்வயல் மற்றும் தோட்டக் காணிகளாக இருக்கின்றன. புகையிரத பாதை செல்லவிருக்கும் பிரேரிக்கப்பட்ட வழியில் வாழிடங்கள் மிகக் குறைவாக இருக்கின்றன.

இதனால் புகையிரதப்பாதையமைப்புக்குத் தேவையான நிலத்தை பெறுவதில் பெரும் சிக்கல்கள் இருக்காது. மேலும் ஒப்பீட்டு ரீதியில் அரச காணிகள் கூடுதலாக இருப்பதால் நட்டஈடு கொடுத்தாலும் குறை வாக இருக்கும். புகையிரதப் பாதைகள் செல்லவிருக்கும் நிலப்பரப்பின் தற்போதைய நிலப்பயன்பாடு பின்வருமாறு.

அட்டவணை- I

| | |
|---|---|
| காங்கேசன்துறை - பலாலி | காடு அழிவுற்று மீள் குடியேற்றத்துக்கு காத்திருக்கும் பகுதி |
| தம்பாலை -தொண்டைமானாறு | தரவை நெற்பரப்பு |
| தொண்டைமானாறு -கெருடாவில் | நெற்காணி |
| கெருடாவில் - தனக்காரக்குறிஞ்சி | நெற்காணி |
| தனக்காரக்குறிஞ்சி -கம்பர் மலை | நெற்காணி/ தோட்டக்காணி |
| கம்பர் மலை -கொற்றாவத்தை | தோட்டக்காணி |
| கொற்றாவத்தை - வதிரி | தோட்டம்/ குடியிருப்பு |
| வதிரி -அல்வாய் தெற்கு | தோட்டம்/ குடியிருப்பு |
| அல்வாய் தெற்கு -புலோலி தெற்கு | வீட்டுத்தோட்டம் |
| புலோலி தெற்கு-வரணி | நெல்வயல்,தரவை, கடல்நீர்ஏரி |
| வரணி -கொடிகாமம் | பனைவளவு, தோட்டம் |
| காங்கேசன்துறை -மாதகல் | தோட்டம் குடியிருப்புக்கள் |
| மாதகல் -திருவடி நிலை | தரவை |
| திருவடி நிலை -பொன்னாலை | தரவை, பற்றைக்காடு |

இப்பாதைகள் அமைப்பதற்காக சாதக நிலைமைகள் பின்வருமாறு,

மெற்றோ பரப்புப் போக்குவரத்துக்கு புகையிரத போக்குவரத்து சேவையே (Metro rail) சிறந்தது. இது உலகில் பல பெரிய, நடுத்தர நகர்களில் காணப்படும் போக்குவரத்து முறையாகும்.

வாகனங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதாலும், வீதிகளுக்குள் வரும் நிலப்பரப்பு அதிகரிப்பதாலும் வீதிகளுக்கு வரும் நிலப்பரப்பு அதிகரிப்பதாலும் சுற்றுச் சூழல் பாதிப்பு கூடுதலாக இருக்கும்.

உத்தேச புகையிரதப் பாதைகள் செல்லும் எல்லை நிலங்களாகவும் மக்களின் பயன்பாட்டில் குறைவாக இருப்பதுவும் கூடுதலாக அரச காணியாக இருப்பதால் காணி பெறுவது சுயமாக இருப்பதுடன் நட்டஈட்டு செலவு குறைவாகவும், ஒப்பீட்டு ரீதியில் இத்திட்டச் செலவு குறைவாகவும் இருக்கும்.

இத்திட்டத்தின் மூலம் யாழ்ப்பாண மெற்றோ பரப்புக் குடியிருப்புக்கள் முழுவதற்கும் சிறந்த போக்குவரத்தைக் கொடுக்க முடியும்.

இப்பாதையின் யாழ்ப்பாண நகர், காங்கேசன்துறைமு கம், பலாலி விமான நிலையம் அச்சுவேலி கைத்தொழில் பேட்டை மற்றும் பிரதான நகர்கள் இருக்கின்றன.

யாழ்ப்பாண மெற்றோ பிரதேசத்தில் புதிய கைத்தொழில் மற்றும் குடியிருப்புக்களை புகையிரத நிலையங்களை அண்டி நிறுவ முடியும்.

இச் சுற்றுப்பாதையில் நடுவில் இருக்கும் செம்மண் பகுதியை விவசாய நிலமாகப் பேண முடியும். மேலும் சிறப்பான நிலப்பயன்பாட்டு ஒழுங்கை உருவாக்கமுடியும்.

யாழ்ப்பாண மெற்றோ திட்டம் பென்ரன் கோர்த்த மணி மாலையை ஒத்த ஒரு மாதிரி. இதில் பென்ரன் யாழ். நகராகவும் ஒவ்வொரு மணியும் ஒவ்வொரு சிறு நகராகவும் இருக்கின்றன.

ஆகவே மக்கள் குடியிருப்புக்கள் கைத்தொழில் இட அமைவுகள், ஒவ்வொரு சிறு நகரிலும் அல்லது யாழ்ப்பாண நகரிலும் அமைவிடம் பெறும். இதன்மூலம் சிறந்த நிலப்பயன்பாட்டையும் சிறந்த போக்குவரத்துக் கட்டமைப்பையும் வழங்க முடியும்.

ஒவ்வொரு நகரங்களுக்கிடையேயான போக்குவரத்து இந்தப் புகையிரதப் பாதை மூலமே பிரதானமாக இடம் பெறும்.

யாழ்ப்பாண மெற்றோ பரப்பின் போக்குவரத்தை மேம்படுத்தவும், பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுக்கவும் இப்பிரதேசத்திற்கு மெற்றோ-ரயில் திட்டம் பொருத்தமாக இருக்கின்றது.

இத்திட்டம் பல சிறப்புப் பண்புகளைக் கொண்டது. போக்குவரத்துக்கு ஏற்றதாகவும் இடஞ்சார் அபிவிருத்திக்கு ஏற்றதாகவும் சுற்றுச் சூழல் பாதிப்பு திட்டமாக இருக்கின்றது.

இத்திட்டத்தை சரியான முறையில் முன்மொழியப்படின் இந்தியாவினதோ அல்லது சர்வதேச நிறுவனங்களின் நிதியுதவியைப் பெற முடியும். சர்வதேச ரீதியில் மெற்றோரயில்திட்டங்கள்நல்ல வரவேற்பைப் பெறுகின்றன.

தனியார் வாகன உடைமை அதிகரிப்பினால் போக்குவரத்து நெரிசலும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளும் நிலப் பிரச்சினைகளும் உருவாகுமேயல்லாமல் தினசரி பெரும் எண்ணிக்கையிலானமக்களின்போக்குவரத்திற்கு ஈடு கொடுக்கக் கூடியதாக அமைவதில்லை

பெருநகர்ப் பிரதேச போக்குவரத்திற்கு மெற்றோ ரயில் திட்டமே சிறந்ததென நிரூபணமாகியுள்ளது.

அண்மையில் சென்னை நகர் போக்குவரத்தை மேம்படுத்த மெற்றோ ரயில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கடந்த காலங்களில் நிலவிய போக்குவரத்து நெரிசலில் பெருமளவு மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அறியக் கிடக் கின்றது. இதேமாதிரி டில்லி, மும்பை போன்றநகர்களிலும்மெற்றோ திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. அங்கு காணப்படும் திட்டங்கள் ஒரு பக்கம் சுரங்க வழியாகவும் அல்லது உயர்த்தப்பட்ட கொங்கிறீட் பாதைகள் வழியாக நடைபெறுகின்றன. ஆனால் இங்கு ஏற்கனவேயுள்ள சாதாரண புகையிரதப் பாதை சேவையை ஒரு சுற்று வட்டப்பாதையாக மாற்றும் ஒரு சிறு திட்டமேயாகும்.

ஆகவே இத்திட்டத்தை முன்னெடுப்பது யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கு பல வழிகளிலும் நன்மையளிப்பதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போனவர்கள் குறித்த சட்டத்தை எதிர்ப்போர் இரட்டை நிலைப்பாடுடைய அரசியல் பேய்கள்!



## அமைச்சர் மங்கள சமரவீர விசனம்

(கொழும்பு) வெள்ளை வான் கடத்தல் கலாசாரத்தை நாட்டுக்கு அறிமுகம் செய்தவர்கள் காணாமல் போதல் குறித்த சட்டத்தை தடுக்கின்றார்கள் என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பலவந்தமாக காணாமல் போதல்கள் தொடர்பிலான சர்வதேச பிரகடனத்திற்கு முன் வைக்கப்பட்டுள்ள புதிய சட்டம் தொடர்பில் அறிக்கை ஒன்றின் மூலம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரட்டை நிலைப்பாடுடைய அரசியல் பேய்கள் இன்று காணாமல் போதல்கள் குறித்த சட்டத்தை எதிர்க்கிறனர்.

காணாமல் போதல்களை தடுக்கும் புதிய சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இவ்வாறான சட்டமூலம் நாகரிகமான உலகில் சமூகத்தின் அனைத்து மனிதர்களுக்கும் கிடைக்க வேண்டிய உரிமைகளை வலியுறுத்தி நிற்கின்றது.

இந்த சட்டத்தின் பிரதான அடிப்படை நாட்டில் பிறக்கும் அனைத்து இலங்கையர்களும் பலவந்தமான அடிப்படையில் காணாமல் போவதனை தடுக்க வேண்டியதாகும்.

காணாமல் போதல்களை தடுக்கும் புதிய சட்டம் கடந்த கால சம்பவங்களை பாதிக்காது. எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதனை தடுக்கவே சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

கடந்த காலங்களில் வெள்ளை வான் கலாசாரத்தை அறிமுகம் செய்த தரப்பினர் இந்த உத்தேச சட்டம் தொடர்பில் பொய்யான பீதியை கிளப்பி மக்களை பிழையாக வழிநடத்த முயற்சிக்கின்றனர் என மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இழுவைமடி சட்டமூலத்தில் எவ்வித மாற்றமும் இல்லை

## அமைச்சர் அமரவீர உறுதி

இழுவைமடி மீன்பிடி தொடர்பாக அண்மையில் கொண்டுவரப்பட்ட சட்டமூலத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படமாட்டாதென மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இழுவைமடி மீன்பிடியில் ஈடுபடுவோருக்கு அபராதம் விதித்தல், குறித்த சட்டமூலத்திற்கு இந்திய மீனவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்ற நிலையில் குறித்த சட்டமூலம் எந்த வகையிலும் மீளப் பெறப்படமாட்டாதென அமைச்சர் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்தோடு, குறித்த சட்டமூலம் இந்திய மீனவர்களுக்கு மட்டுமல்ல எனக் குறிப்பிட்ட அமைச்சர், சகல மீனவர்களுக்கும் பொருந்துமெனவும் தெரிவித்தார்.

விசைப்படகுகளை பயன்படுத்தி இழுவைமடி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்கு எதிரான குறித்த சட்டமூலம், கடந்த 6ஆம் திகதி நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டமூலத்தின் பிரகாரம் விசைப் படகொன்றிற்கு 20 கோடி ரூபாய் வரை அபராதம் விதிக்கலாம்.

இந்நிலையில், குறித்த சட்டமூலம் தம்மை பாதிப்பதாக அமைந்துள்ளதென தெரிவித்து, இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று முன்தினம் முதல் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# டெங்கு பரவும் வகையில் உள்ள காணிகளுக்கு வரி விதிக்கப்படும்



(கொழும்பு) டெங்கு தொற்று நோய் பரவும் வகையில், மேல் மாகாணத்தில் காணப்படும் காணிகள் மற்றும் கைவிடப்பட்ட காணிகளின் உரிமையாளருக்கு 2 சத வீதம் வரியாக அறவிட தீர்மானம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேல்மாகாணத்தின் முதலமைச்சர் இசுறு தேவபிரியவின் தீர்மானத்துக்கு அமைய, நேற்று முதல் இந்த நடவடிக்கை அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தக் கைவிடப்பட்டுள்ள காணிகளை அரசுடைமையாக்கவும் வாய்ப்பு உள்ளதாக முதலமைச்சர் இசுறு தேவபிரிய தெரிவித்தார். (இ-7)

# அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்திற்கு கடும் எச்சரிக்கை

இலங்கை மருத்துவ சபையின் தலைவர் காலோ பொன்சேகாவை நீக்கி விட்டு புதியவரை நியமிப்பதற்கு அரசாங்கம் முயற்சித்தால் முன்னறிவித்தலின்றி வேலைநிறுத்த போராட்டத்தில் குதிக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர் டாக்டர் நளிந்த ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாலபே சைட்டம் மருத்துவக் கல்லூரி தொடர்பான விடயத்தை காரணம் காட்டி அரசாங்கம் இலங்கை மருத்துவ சபையின் தற்போதைய தலைவரை பதவி நீக்கம் செய்வதற்கு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன திட்டமிட்டுள்ளார்.

இலங்கை மருத்துவ சபையின் தற்போதைய தலைவர் காலோ பொன் சேகாவின் பதவிக்காலம் நிறைவடையவில்லை. ஆனாலும் சுகாதார அமைச்சர் தலைவர் பதவிக்கு காலோ பொன்சேகாவை நீக்கிவிட்டு வேறு ஒருவரை நியமிக்கவுள்ளார். இது சட்ட விரோத செயற்பாடாகும்.

அமைச்சர் ராஜித சேனாரட்ன இல்லாதது பொல்லாததை அமைச்சரவையில் கூறி மோசமான தீர்மானங்களை நிறைவேற்றிக் கொள்கின்றார். தற்போதைய சுகாதார அமைச்சருக்கு நாட்டில் மொத்தம் எத்தனை வைத்தியர்கள் இருக்கிறார்கள் என்பது கூட தெரியாமல் உள்ளது.

ஆகவே இலங்கை மருத்துவ சபையின் தலைவர் காலோ பொன்சேகாவை நீக்கி விட்டு புதியவர்களை நியமிப்பதற்கு அரசாங்கம் முயற்சித்தால் முன்னறிவித்தல் இன்றி வேலை நிறுத்த போராட்டத்தில் குதிக்க வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் தெரிவித்தார். (இ-7)


# பெறுகை அறிவித்தல்

## பருத்தித்துறை நகரசபை

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை-2017 கட்டம்

II

1. தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை பருத்தித்துறை அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2.பெறுகையானது பொதுநிதிச் சுற்றறிக்கை 04/2016(1) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபாரம் அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதிப் புனரமைப்பிற்கான இக்ராட் பதிவுள்ளவராகவும், கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

3.தேவையானதகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள் ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

4.ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் மேலதிக தகவல்களையும், பெறுகை ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

5.பெறுகைப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 2017.07.12 ஆம் திகதி தொடக்கம் 2017.08.01 ஆம் திகதி பி.ப.15.00 மணிவரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1170/- (VAT, NBT உட்பட)இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

6.பெறுகைப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி:- 2017.08.02 ஆம் திகதி 15.00 மணிவரை

பெறுகைகள் திறக்கப்படும் திகதி : 2017.08.02 ஆம் திகதி 15.30 மணி (பெறுகைப் பத்திரம் திறக்கப்படும் சமயம் பெறுகையினை சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)

7.பெறுகை ஆவணங்களை இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

8.பெறுகை தொடர்பான முதற் கூட்டம் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் 2017.08.19 ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.

9.கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். (சி-9029)

| இல. | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை மில்லியன் ரூபாவில் (வற் நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | பெறுகைப் பிணைவைப்பு (மீளளிக்கப் படக்கூடியது) |
|---|---|---|---|---|---|
| 1 | இலட்சுமணன் தோட்டம் வீதிபுனரமைப்பு (கொங்கிறீற்) | 4.346 Mn | 2மாதங்கள் | C8 | 43000.00 |
| 2 | நெல்லணடைதெற்குவீதி புனரமைப்பு (கொங்கிறீற்) | 3.938 Mn | 2 மாதங்கள் | C8 | 39000.00 |
| 3 | கோணந்தீவு,கல்லூரிவீதி இணைப்புவீதி புனரமைப்பு(கொங்கிறீற்) | 2.026 Mn | 1 ½ மாதங்கள் | C8 | 20000.00 |

புவனேந்திரன் ரமேஸ்வரன்,
தவிசாளர்
உள்ளூராட்சிமன்ற பெறுகைக் குழு,
பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை.
10.08.2017


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## உப்பு வியாபாரியும் கழுதையின் தந்திரமும்

முன்னொரு காலத்தில் ஒரு உப்பு வியாபாரி இருந்தான். அவன் தினந்தோறும் ஒரு கழுதையின் மீது உப்பு மூட்டைகளை ஏற்றி ஊருக்குள் போய் வியாபாரம் செய்து வருவான். போகும் வழியில் ஒரு ஆறு இருந்தது. அந்த ஆற்றைக் கடந்து தான் ஊருக்குள் போக வேண்டும்.

ஒரு நாள் உப்பு வியாபாரி வழக்கம் போல கழுதையின் முதுகில் உப்பு மூட்டைகளை ஏற்றிக் கொண்டு வியாபாரத்திற்கு கிளம்பிச் சென்றான். வழியில் உள்ள ஆற்றை கழுதை கடந்த போது எதிர்பாராமல் கழுதையின் கால்கள் வழுக்கி விட்டது. எனவே, கழுதை தடுமாறி ஆற்றுக்குள் விழுந்து விட்டது.

கழுதை தவறி விழுந்ததால் அதன் முதுகில் இருந்த உப்பு மூட்டை நனைந்து விட்டது. கழுதையை வியாபாரி மெல்ல தூக்கிவிட்டான். ஆனால், நீரில் மூழ்கியதால் உப்பு மூட்டை நனைந்தது அல்லவா? அது ஒரு சில நிமிடத்தில் அப்படியே, தண்ணீரில் கரைந்து பாதி மூட்டையாகிவிட்டது.

எனவே, கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை வெறும் சாக்குப் போல எடையில்லாதபடி ஆகிவிட்டது. ஆஹா என்ன ஆச்சரியம் இப்போது கழுதை முதுகில் சுமையே தெரியவில்லை.

கழுதைக்கு மிகுந்த சந்தோஷம். ஆனால் வியாபாரிக்கு பெரிய நஷ்டம். உப்பு வியாபாரியும் உப்பு வியாபாரம் செய்ய வழியில்லாமல் கழுதையை ஓட்டிக் கொண்டு வீட்டிற்கு திரும்பினான்.

மறுநாளும் வழக்கம் போல வியாபாரி உப்பு வியாபாரத்திற்கு கிளம்பினான். கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை கழுதைக்கு கனமாக இருந்தது. கழுதை மெல்ல நடந்து ஆற்றுப் பாலம் அருகே வந்தது. திடீரென அதற்கு முந்தைய நாள் நினைவு வந்தது. எனவே, மெல்ல தடுமாறுவது போல செய்து சட்டென்று ஆற்றுக்குள் விழுந்தது.

அடுத்த நிமிடம் கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை நீரில் கரைந்து விட்டது. இன்றும் கழுதைக்கு முதுகில் சுமை இல்லாது போய் விட்டது.

கழுதை தனது தந்திரத்தால் தொடர்ந்து இதையே செய்த வந்தது. இதனால் தினமும் வியாபாரத்திற்குப் போக முடியாமல் வியாபாரி தொடர்ந்து சிரமம் கொண்டான். அவனுக்கு மெல்ல மெல்ல கழுதையின் தந்திரம் புரிந்தது. எனவே, அதற்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க நினைத்தான்.



அன்று கழுதை முதுகில் வழக்கம் போல உப்பு மூட்டையை ஏற்றவில்லை வியாபாரி. மாறாக, பஞ்சு நிறைந்த ஒரு சாக்கு மூட்டையை கழுதை முதுகில் ஏற்றினான். கழுதை வழக்கம் போல ஆற்று பாலத்தின் அருகே வந்தது. எதிர்பாராமல் கால் தடுமாறுவது போல தடுமாறி ஆற்றிற்குள் விழுந்தது.

மூட்டையில் இருந்த பஞ்சு நீரில் நனைந்தது. அடக் கஷ்டமே! கழுதையின் முதுகில் இருந்த பஞ்சு மூட்டை முன்பைவிட அதிகமாக கனத்தது.

கழுதையும் மிகவும் கஷ்டப்பட்டு ஆற்றைக் கடந்து கரைக்கு வந்து சேர்ந்தது.

தனது ஏமாற்று வேலை இவ்வளவு நாள் தன்னைக் காப்பாற்றிவந்த வியாபாரிக்குத் தெரிந்து விட்டத்தை எண்ணி வெட்கப்பட்டது. இனி நேர்மையாக நடக்க முடிவெடுத்தது.

நாமும். நம்மை நம்பியவர், நம்பாதவர் யாரையும் ஏமாற்றக் கூடாது. அப்படி செய்தால் ஒரு நாள் நம் செயல் அவர்களுக்குத் தெரியவரும்.

அன்று அவமானம் அடையும் நிலை வரும். அதற்கான தண்டனையும் நமக்குக் கிடைக்கும்

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

07.2017 11

- 1895 - லூமியேர சகோதரர்கள் அறிவியலாளர்களுக்கு திரைப்படம் ஒன்றைக் காண்பித்தனர்.
- 1921 - மங்கோலியா சீனாவிடமிருந்து விடுதலை பெற்றது.
- 1936 - நியூயோர்க் நகரில் டிறைபரோ பாலம் திறக்கப்பட்டது.
- 1943 - போலந்தில் வொல்ஹீனியா என்ற இடத்தில் நாசி ஜெர்மனியரினால் ஆயிரத்துக்கும் அதிகமான போலந்து மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1973 - பிறேசில் போயிங் விமானம் பாரிசில் விபத்துக்குள்ளாகியதில் 134 பேரில் 123 பேர் கொல்லப்பட்டனர்.
- 1979 - ஸ்கைலாப் விண்வெளி நிலையம் பூமிக்குத் திரும்பியது.
- 1982 - இத்தாலி மேற்கு ஜெர்மனியை 3 - 1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து உலக காற்பந்துக் கிண்ணத்தை வென்றது.
- 1987 - உலக மக்கள் தொகை 5 பில்லியனைத் தாண்டியது.
- 1990 - கொக்காவில் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டது.
- 1995 - சேர்பிய இராணுவம் பொஸ்னிய நகரான சிரெப்ரென்னிக்காவைத் தாக்கியதில் 8,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 2007 - பாகிஸ்தான் தலைநகர் இஸ்லா மாபாத்திலுள்ள செம்மசூதிக்குள் இருக்கும் தீவிரவாதிகளை வெளியேற்றும் முகமாக இராணுவத்தினர் மசூதியின் மீது தாக்குதல் நடத்தியதில் மசூதியின் மதகுரு அப்துல் காஸி உட்பட குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டனர்.
- 2007 - குடும்பிமலை புலிகளின் முகாம் வீழ்ச்சியடைந்தது.

பிறப்புகள்

- 1857 - சி. சங்கரன் நாயர், இந்திய அரசியல்வாதி (இ. 1934)
- 1920 - வி. ஆர். நெடுஞ்செழியன், தமிழக அரசியல்வாதி (இ. 2000)
- 1921 - பா. ராமச்சந்திரன், தமிழக அரசியல்வாதி (இ. 2001)
- 1925 - குன்றக்குடி அடிகள், சமய, இலக்கியவாதி (இ. 1995)
- 1925 - கா. மீனாட்சிசுந்தரம், தமிழறிஞர் (இ. 2015)
- 1951-சிறீதரன் ஜெகநாதன், இலங்கைத் துடுப்பாட்டக்காரர் (இ. 1996)
- 1953 - சுரேஷ் பிரபு, இந்திய அரசியல்வாதி
- 1956 - அமிதவ் கோசு, இந்திய-அமெரிக்க எழுத்தாளர்
- 1966 - பாலா, தமிழ் திரைப்பட இயக்குனர்
- 1967 - ஜ/ம்ப்பா லாஹிரி, ஆங்கிலேய-அமெரிக்க எழுத்தாளர்
- 1989 - டேவிட் ஹென்றி, அமெரிக்க நடிகர்
- 1990 - கரோலின் வோஸ்னியாக்கி, டென்மார்க்கு டென்னிசு வீராங்கனை

இறப்புகள்

- 1956 - அ. வரதநஞ்சைய பிள்ளை, தமிழறிஞர் (பி. 1877)
- 1962 - பல்லடம் சஞ்சீவ ராவ் புல்லாங்குழல் கலைஞர் (பி.1882)
- 2009 - ஜி சியான்லின், சீன மொழியியலாளர் (பி. 1911)
- 2015 - பூ. செந்தூர் பாண்டியன், தமிழக அரசியல்வாதி (பி. 1951)

சிறப்பு நாள்

- உலக மக்கள் தொகை நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 160 | 120 | 100 | 120 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 300 | 240 | 300 | 300 | 280 |
| தக்காளி | 160 | 160 | 120 | 160 | 160 | 100 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 120 | 60 | 80 | 80 | 70 | 80 |
| கோவா | 150 | 160 | 100 | 160 | 120 | 120 | 160 |
| கரட் | 200 | 200 | 300 | 240 | 300 | 180 | 280 |
| பூசணி | 120 | 120 | 100 | 100 | 120 | 80 | 100 |
| புடோல் | 100 | 120 | 50 | 80 | 120 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 120 | 60 | 80 | 80 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 400 | 300 | 300 | 300 | 250 | 280 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 200 | 140 | 200 | 200 | 120 | 240 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 100 | 120 | 120 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 150 | 50 | 120 | 160 | 120 | 160 |
| பயற்றங்காய் | 120 | 120 | 100 | 120 | 120 | 100 | 160 |
| லீக்ஸ் | 100 | 150 | 80 | 120 | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 60 | 120 | 80 | 120 | 120 | 80 | 60 |
| கறிமிளகாய் | 200 | 150 | 200 | 280 | 240 | 200 | 280 |
| முருங்கைக்காய் | 250 | 150 | 150 | 200 | 200 | 200 | 280 |
| போஞ்சி | 200 | 300 | 120 | 200 | 200 | 150 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 120 | 120 | 120 | 100 | 120 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 30 | 30 | 25 | 40 |
| தேசிக்காய் | 30 | 50 | 60 | 80 | 120 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 60 | 60 | 40-60 | 70 | 70 |
| இராசவள்ளி | 240 | 300 | -- | -- | -- | - | 250 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 150 | 200 | 280 | 200 | 100 |
| முள்ளங்கி | 60 | 100 | 30 | 80 | 120 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 40 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 |
| ஊப்பலா | 80 | 100 | -- | -- | 80 | 80 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பதற்கு தேவையான வலிமையான கரங்களை விட, உங்களுடைய இலட்சியங்களில் அதிக வலிமை இருக்க வேண்டும். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மண் பிரச்சினைக்கு அங்கும் தீர்வு இல்லை இங்கும் தீர்வு இல்லை

தமிழர்களின் தாயக மண் என்ற பிரச்சினைக்கு இன்னமும் ஆட்சியாளர்கள் தீர்வு காணவில்லை.

அவர்களைப் பொறுத்தவரை இலங்கை மண் சிங்கள பௌத்தத்துக்குரியது. தமிழர்கள் வந்தேறு குடிகள் என்பதுதான்.

தமிழர் இராச்சியம் இலங்கையில் இருந்தது என்பதை ஏற்பதற்குக் கூட அவர்கள் தயாரில்லை.

இதனால் தமிழ் மக்கள் தங்கள் சொந்த மண்ணை இழந்து ஏதிலிகளாக அலைகின்றனர்.

பாதுகாப்பு என்ற பெயரில் சொந்த மண் கபளீகரம் செய்யப்பட்டுள்ளது. என்ன செய்வது! சொந்த மண்ணை மீட்டெடுக்கும் மண் மீட்புப் போரில் உயிரிழப்புக்கள் மட்டுமே மிச்சம் என்ற நிலையில், தமிழ் மக்களின் அவலம் நீண்டு செல்கிறது.

இந்நிலையில் இருக்கின்ற நிலத்தில் சிறு வீடு கட்டி ஆறுதலாய் குடியிருக்கலாம் என்றால் வீடு கட்டுவதற்கு மண் எடுப்பது முடியாத காரியம் என்றாயிற்று.

வீடு கட்டுதல் உள்ளிட்ட கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மண்ணைப் பெறுவதற்கு முடியாத சூழ்நிலையில், மாற்று வழிகளும் இல்லாத கட்டத்தில் சட்டவிரோத மண் என்ற விவகாரம் எழவே செய்கிறது.

சட்டவிரோத மண் என்ற விவகாரத்தால், உயிரிழப்புக்கள், வாகனப் பறிமுதல்கள் என்பன உட்பட மிகப்பெரும் சேதங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன.

இதுதவிர, ஏழை மக்கள் அதிகூடிய விலை கொடுத்து மண்ணைக் கொள்வனவு செய்ய வேண்டிய பரிதாபத்துக்கு ஆளாகின்றனர்.

எனினும் இது தொடர்பில் எவரும் உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

போரினால் பாதிக்கப்பட்ட வட மாகாணத்தில் கட்டுமானப் பணிகள் அதீதமாக நடைபெறவே செய்யும். தவிர, வீட்டுத்திட்டங்களும் நகர அபிவிருத்திப் பணிகளும் முழுமூச்சுடன் இடம்பெறும் இந்நிலையில்,

கட்டுமானத்தின் மூலப்பொருளாகிய மண்ணுக்குத் தட்டுப்பாடு நிலவும் போது அதனால் மக்கள் பெரும் நஷ்டங்களை அனுபவிப்பர்.

அத்துடன் கட்டுமானத் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழக்கின்ற பரிதாபத்துக்கு ஆளாக வேண்டியிருக்கும்.

எனினும் இதுபற்றி யாரும் கதைப்பதாக இல்லை. யாழ்ப்பாண மாவட்ட அதிகாரிகள் எதுவும் செய்ய முடியாதவர்களாக இருக்கின்றனர். வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் இசையும் அசைவும், பாட்டும் பயனும், கதையும் பாட்டும் என்பதாக நிகழ்ச்சிக் கும்மாளம் அடிக்கின்றனர்.

இந்நிலையில் சட்டவிரோத மண் என்ற விவகாரம்; பொலிஸாரின் துப்பாக்கிச் சூடு; இளைஞன் பலி என்ற ஒரு பரிதாபகரமான சூழ்நிலையைத் தோற்றுவிக்க,

அது வடமராட்சியில் பதற்றம்; விசேட அதிரடிப்படை மற்றும் பொலிஸார் குவிப்பு என்பதான நிலைமையை ஏற்படுத்திவிட்டது.

ஆக, கட்டுமானத்துக்குத் தேவையான மண்ணைப் பெறும் வழிமுறையை இனங்கண்டு அதனை நடைமுறைப்படுத்தாததால் ஏற்பட்ட இழப்புக்கள் ஈடுசெய்ய முடியாதவை.

இதுபோன்ற உயிரிழப்புக்கள் இனிமேலும் ஏற்படாதவாறு தவிர்க்க உரியவர்கள் உரிய நடவடிக்கையை எடுத்தாக வேண்டும்.

# மாகாண நிர்வாகம் ஆளுநருக்கு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படுகின்ற மாகாணங்களில் அதன் நிர்வாகம் ஆளுநர்களுக்கு வழங்கப்படுமா என்ற விடயத்தில் அரசு கவனம் செலுத்துவதாக செய்திகள் கிடைத்துள்ளதாக முன்னாள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சரும் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தற்போது சப்ரகமுவ, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாண ஆட்சிக் காலம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முடிகிறது.

அவ்வாறு முடிவுக்கு வரும் மாகாண சபைகளுக்கான அடுத்த தேர்தல் வேட்பு மனுக்களை ஏற்கும் திகதி செப்ரெம்பர் முதலாம் திகதியாகும் எனதேர்தல்ஆணைக் குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய கூறியுள்ளார்.

அரசமைப்பு "17" அ பிரிவின் 154(I) இன்படி உப ஜனாதிபதியினால் வர்த்தமானியில் திகதியோ அல்லது அந்த திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 8ஆவது உப பிரிவில் குறிப்பிட்டபடி அரசியல் யாப்பின் மாகாண சபைகள் சட்டத்தின் கீழ் மாகாண சபைகள் அமைக்கப்பட வேண்டும்.

அவ்வாறு நடைபெறும் மாகாண சபை நிர்வாகம் யாப்பு சட்ட திட்டங்களுக்கு அமைவாக இல்லை எனில், அதே மாகாண ஆளுநர்களின் அறிக்கைகளுக்கு ஏதுவான சூழல் இல்லை என ஜனாதிபதி கருதினால் மாகாண நிர்வாகம் அதன் கீழுள்ள கடமைகள் ஆளுநர்களுக்கோ மாகாண சபைகளற்ற "சபைகள்" "அதிகார சபை" ஆகியவற்றின் சகல அதிகாரமும் ஜனாதிபதியினால் விடுக்கப்படும் அறிவிக்கையூடாக அரசியலமைப்பு 154 ஓ (I) அ (I) ஆ சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில்13ஆவது அரசியல் (யாப்பு) அமைப்பூடாக மாகாணங்களின் ஆட்சிக்காலம் வரையறுக்கப்படும் காலம் 5 வருடங்களாகும்.

இக்கால எல்லைக்கு பின் தேர்தல் நடத்தாது போனால் மக்களின் அடிப்படை உரிமை மீறுதலால் மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டி வரும்.

மாகாண சபைகளின் குறைபாடுகளால் ஆளுநர்களின் அறிக்கைப்படி ஆளுநர்களுக்கு வழங்கப்படும் அறிக்கையின்படி மாகாண சபை காலம் முடிவுக்கு வரும் வரை ஆளுநர்கள் பார்த்துக் கொள்வது எந்தளவு ஜனநாயகம் என தேர்தல் ஆணைக்குழு சிரேஷ்ட அதிகாரி கருத்து தெரிவித்தார். (மு)

## காணாமல்போன தாய் மற்றும் பிள்ளை சடலங்களாக மீட்பு; அலவ்வயில் சம்பவம்

(கொழும்பு)

அலவ்வ பகுதியில் காணாமல்போனதாக கூறப்படும் தாய் மற்றும் மகளின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அலவ்வ பகுதியைச் சேர்ந்த 31 வயதான பெண் மற்றும் அவரின் 9 வயதான மகள் ஆகியோரது சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இவர்கள் நேற்று முன்தினம் இரவு ரயில் மோதி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் கணவன், தனது மனைவி பிள்ளையுடன் காணாமல்போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், தற்கொலை செய்து கொண்டமைக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை.

மேலும் அலவ்வ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (மு-11)

## கணிதமுகாம்

(யாழ்ப்பாணம்)

அணிய பாடசாலைகளின் தரம் 5 மாணவர்களுக்கான கணித முகாம் இன்று காலை 8.30 மணி முதல் 10.30 மணிவரை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என கோப்பாய் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன் அறிவித்துள்ளார். (இ-10-136)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

அதற்கும் முந்தைய யுகத்தில் இரண்யாட்சன் எனும் அரக்கன் ஒருவன் இருந்தான். அடாத செயல்களை விடாது செய்துவந்த அவனால் தேவர்களுக்குத் தீரா இடும்பை. வேதங்கள் அனைத்தும் வீணனின் கைக்கு அகப்படாமல் விரைந்தோடி ஒளிந்தன. வருணனும் ஒளிந்தான். வாயுவும் ஒளிந்தான். வான்மழை பொய்த்தது. காற்றின்றி வெற்றிடமாக இருந்த திசை நோக்கிக் கடல் பொங்கியது. பிரளயம் தொடங்கியது.

இரண்யாட்சனின் சினம் எல்லை மீறியது. இரண்யாட்சன் புனிதமான பூமிக்குப் பொல்லாப்பு விளைவிக்க எண்ணிப் பூமாதேவியைப் பாயாகச் சுருட்டி பாதாளத்தில் பதுக்கி வைத்தான். (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### ஏகார்களம் நாளில் திருமணம் நடத்தலாமா?

ஏகார்களம் என்பது நட்சத்திரமும் யோகமும் சேர்வதாகும்.

வ்யாகாதாம்- புனர்பூசம், பரிக யோகம்- மகம்,விஷ்வகம்பம்- அஸ்வினி, அதிகண்டம்- அனுஷம், வைதிருதி- பூசம், சூலம் யோகம்- மிருகசீரிடம், வ்யாதிபாதம்- ஆயிலியம், கண்டம் யோகம்- மூலம், வஜ்ர யோகம்- சித்திரை.

இவைகள் தோஷமாகும். இந்த நட்சத்திரமும் யோகமும் கூடி வரும் நாளில் எவ்வித சுபகாரியங்களும் செய்தல் கூடாது. (தொடரும்)

## இயற்கைப் பானங்களை மீள அறிமுகப்படுத்துவோம்!

பிள்ளைகள் இனிப்பூட்டிய பானங்களுக்கு அடிமையாவதை நிறுத்தி, குடிநீர், இயற்கையான பானங்கள் அருந்துவதை ஊக்கப்படுத்துவோம். இதற்காக எமது பழக்கவழக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவோம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளைபுதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில் நாவற்குழி, மறவன்புலோ, தச்சன் தோப்பு, தனங்கிளப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மடுக்கரை பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ இறந்தவர்கள் திரும்புவதில்லை. கழிந்த இரவு மீண்டும் தோன்றுவதில்லை ஓய்ந்த பேரலை புதிதாக வருவதில்லை. அதுபோல் மனிதனும் அதே உடலில் மறுபடியும் புகுவதில்லை. ஆதலால் மனிதனே இறந்த காலத்தை வழிபடுவதை விட்டு நிகழ்காலத்தை வழிபடுமாறு உன்னை அழைக்கின்றோம்.

❖ கழிந்ததை எண்ணி வருந்துவதைத் தவிர்த்து தற்கால முயற்சிகளில் ஈடுபடுமாறு உன்னை அழைக்கின்றோம்.

❖ மறைந்தும் அழிக்கப்பட்டும் ஒழிந்த பாதைகளைத் தேடித் திரும்பவும் கண்டு பிடிப்பதில் ஆற்றலை வீணாக்கு வதைவிட்டு பக்கத்தில் உள்ள அகன்ற புதிதாக அமைந்த பாதைகளைச் சேருமாறு உன்னை அழைக்கின்றோம். புத்திசாலி இதை அறியட்டும்.

❖ உண்மையான நம்பிக்கை பற்றிய கருத்தை மீண்டும் நம்மிடம் உயிர்ப்பிக்க வேண்டும். நம்மிடமுள்ள நம்பிக்கையை மறுபடியும் விழித்தெழச் செய்யவேண்டும்.

❖ அதன்பின்னர் நமது நாட்டினர் முன்பு நிற்கும் துயரங்கள் அனைத்தையும் நாமே மெல்ல மெல்லத் தீர்த்து விடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவவெளியீட்டுப்பகுதி

# கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## றேஞ்சர்ஸ், நவஜீவன்ஸ் வெற்றி



அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்தமாக கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 09.07.2017 அன்று நடைபெற்ற போட்டியில் ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

இப்போட்டியில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் 3.1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது



ஆட்டத்தில் நவஜீவன்ஸ் வி.கழகத்தை எதிர்த்து சென். பீற்றர் விளையாட்டுக்கழகம் மோதியது. ஆட்ட முடிவில் சமநிலையில் முடிவுற்றது.

சமநிலை தவிர்ப்பு உதை மூலம் நவஜீவன்ஸ் வி.கழகம் வெற்றி பெற்றது.

பதக்கம் கற்கோவளம் சனசமூக நிலையத்தின் செயலாளர் த.ரவிராஜால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (க)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 61வது வருட நிறைவை முன்னிட்டு சரஸ்வதி விளையாட்டுக் கழகம் யாழ்மாவட்ட ரீதியில் நடத்தும் துடுப்பாட்ட தொடரானது எதிர்வரும் வார இறுதி நாட்க்களில் நடைபெறவுள்ளது.

பங்கு பற்ற விரும்பும் கழகங்கள் (077) 9607572 எனும் தொடர்பிலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யவும்.

வெற்றி பெறும் அணிக்கு பரிசில்கள் பணம் மற்றும் வெற்றி கேடயங்களாகவும் வழங்கப்படும்.

கோப்பாய் ஐக்கிய விளையாட்டு கழகம் மறைந்த கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் சிவகடாச்சம் ஞாபகர்த்த மாக 6 வீரர்கள் பங்கு பற்றும் 5 பந்து பரிமாற்றம் கொண்ட கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. போட்டியானது வரும் 15ம்16ம் திகதிகளில் வரும் சனி ஞாயிறு தினங்களில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பங்கு பற்ற விரும்பும் கழகங்கள் சுயிபன் 0776787963 கர்ஸன் 0777602008என் னும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உறுதி படுத்தவும்.

வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும் என போட்டி ஏற்பாட்டு குழுவினர் அறிவித்துள்ளனா (க)

# அரையிறுதியில் சென்றலைட்ஸ்

இலங்கை துடுப்பாட்ட சங்கத்தினால் நடத்தி வரும் பிரிவு மூன்றிற்கான யாழ்ப்பாண கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்ட போட்டியில் காலிறுதி போட்டியில் சென்றல், சென்றலைட்ஸ் அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 இலக்கினை இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றது. அவ் அணி சார்பாக ரஜீவ் குமார் 73, சலிஸ்ரன் 40 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் கிருபா 3, ஜெறிக் 2 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்



தாடிய சென்றலைட்ஸ் செல்ரனின் அதிரடியுடன் 46 ஓவர்கள் நிறைவில் வெற்றி இலக்கை அடைந்தது. அவ் அணி சார்பாக செல்ரன் 125, பிரியலக்சன் 42, இயலரசன் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கிரிசாந் 2 இலக்கினை கைப்பற்றினார்.

அரையிறுதிப் போட்டியில் ஒல்கோட்ஸ் அணியுடன் சென்றலைஸ் மோதவுள்ளது. (க)

# அமரர் ம.சூரியகுமாரன் கபடிச் சுற்றுப்போட்டி

## மைக்கல் வெற்றி

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமராட்சி கபடிச் சங்கத்தின் அனுமதியுடன் “அமரர் ம.சூரியகுமாரன்” ஞாபகார்த்த 20 வயதுக்கு உட்பட்டோருகான யாழ். மாவட்ட ரீதியிலான கழகங்களுக்கு இடையிலான மாபெரும் கபடிச்சுற்றுப் போட்டி நடைபெற்று வருகின்றது. வடமாகாணத்தில் முன்னணி கழகங்கள் பங்கு பற்றும் இத் தொடரில் இரண்டாம் நாள் லீக் போட்டியில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் அணி மோதியது.

பரபரப்பாக ஆரம்பமாகிய போட்டியில் 72-36 என்ற புள்ளிகள் அடிப்படையில் மாலுசந்தி மைக்கல் அணி வெற்றிபெற்றுள்ளது.

ஏ பிரிவில் ஒரு வெற்றிகளுடன் முன்னிலையில் உள்ளது. எதிர்வரும் 12 ஆம் திகதி சாவாகிங்ஸ் அணி



யுடனும் 15 ஆம் திகதி உதயதாரகை அணியுடனும் மோதவுள்ளது. இதில் அதிக புள்ளிகளைப் பெற்றால் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும். (க)

# லீவிஸ் சதம்

# இந்தியாவுக்கு எதிரான இருபது-20 மேற்கிந்திய தீவுகள் அபார வெற்றி



இந்தியாவுக்கு ஏதிரான இருபது-20 போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

கிங்ஸ்டன் நகரில் இந்தியா - மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதிய இருபது-20 போட்டி நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி பந்து வீச்சை தெரிவு செய்தது. இதனையடுத்து இந்திய அணித்தலைவர் விராட் கோலி மற்றும் தவான் ஆகியோர் தொடக்க ஆட்டக் காரர்களாக களமிறங்கினர்.

தொடக்கம் முதலே அதிரடியாக விளையாடிய இந்த ஜோடி மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்து வீச்சாளர்களை பதம் பார்த்தனர். 22 பந்துகளில் 39 ஓட்டங்களை குவித்த கோலி 6 ஆவது ஓவரில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து 12 பந்துகளை [illegible] நான்கு பவுண்டரிகளை விளாசி 23 ஓட்டங்கள் எடுத்து ரன் அவுட் ஆனார்.

பின்னர், களமிறங்கிய ரிஷப் பாந்த் மற்றும் தினேஷ் கார்த்திக் இருவரும் மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சை துவம்சம் செய்தனர். 5 பவுண்டரிகள் மற்றும் 3 சிக்சர்களுடன் தினேஷ் 29 பந்துகளில் 48 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட டோனி 2 ஓட்டங்களில் வெளியேறி ரசிகர்களை ஏமாற்றினார்.

20 ஓவர்களின் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு இந்திய அணி 190 ஓட்டங்களை குவித்தது. மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்து வீச்சாளர்களில் டெய்லர் மற்றும் வில்லியம்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதையடுத்து 191 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கிந்திய தீவுகள் அணி களமிறங்கியது. முதலில் கறமிறங்கிய கிறிஸ் கெய்லும், எவின் லீவிசும் அதிரடி காட்டினார்கள். இதனிடையே 18 ஓட்டங்கள் எடுத்திருந்த கிறிஸ் கெய்ல் குல்தீப் யாதவ் பந்து வீச்சில் விக்கெட்டை பறிகொடுத்தார்.

இதனையடுத்து களமிறங்கிய சாமுவேலும், எவின் லீவிசும் நிலைத்து நின்று ஆடினார்கள்.

இதில் லீவிஸ் அபாரமாக விளையாடி சதமடித்தார். 18.3 ஓவர்களில் மேற்கிந்திய தீவுகள்அணி 194 ஓட்டங்களை குவித்து 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்த சாமு வேல் 36 ஓட்டங்களும் லீவிஸ் 125 ஓட்டங்களும் எடுத்தனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை தானாக தோன்றியதில்லை; அரசே மக்களை வறியவர்கள் ஆக்கியுள்ளது

## பேராசிரியர் வி.பி.சிவநாதன் விபரிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் வளங்களை சூறையாடி கொஞ்சம் கொஞ்சமாக எம்மை வறியவர்களாக்கும் அரசு, வறுமையில் நீங்கள் அழிந்து போக வேண்டும் என நேரடியாகவே கூறலாம் என பேராசிரியர் வி.பி.சிவநாதன் தெரிவித்துள்ளார்.

விவசாயம் மீன்பிடி என்பது எமது நாட்டில் மிக முக்கியமான தொழில் ஆகும். இது இன்னும்மொரு நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டதில்லை. இது பாரம்பரியமாக இருக்கும் தொழில்கள். இந்த பாரம்பரிய தொழில்களுக்குள் அரசாங்கம் இடையில் நுழைந்து கொண்டு தாம் ஒழுங்குபடுத்துவதாக கூறி அதாவது நல்லாட்சி என்ற போர்வையில் ஆதிக்கம் செலுத்துகின்றது.

ஒழுங்குபடுத்துவதாக கூறிக்கொண்டு மக்களை வறியவர்கள் ஆக்கியுள்ளார்கள். வறுமை தானாக தோன்றியதில்லை. மனிதனுக்கு தன்னை எவ்வாறு கொண்டு நடத்த வேண்டும் என நன்றாக தெரியும். ஆனால் இடையில் வந்த அரசாங்கம் மனிதனை கட்டுப்படுத்தி வறியவர்கள் ஆக்கியுள்ளது. இது உருவாக்கப்பட்ட வறுமை ஆகும்.

வறுமை தொடர்பாக வறுமை ஒழிப்புக்கான தெற்காசிய கூட்டமைப்பின் அறிக்கை மற்றும் காணி, வனம், மீன்பிடி வளங்கள் தொடர்பான தன்னார்வ வழிகாட்டி தமிழ் கைநூல் வெளியீடு நேற்றைய தினம் யாழ். றில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு அங்கு வெளியிட்ட அறிக்கை தொடர்பான அறிமுக உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், வடபகுதியில் உள்ள மக்களுக்கு குடியேற்றத்திட்டம் என்ற அடிப்படையில் கடந்த 1930ஆம் ஆண்டுகளில் இருந்து நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டது. அந்த நிலத்தை பயன்படுத்தி வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வழங்கப்பட்டது.

ஆனால், 1950 களில் வழங்கப்பட்ட நிலங்களுக்கு இன்றுவரை கூட உரிமம் வழங்கப்படவில்லை. அரச பொமிட் காணியாக உள்ளது. உறுதி ஆக்கப்படவில்லை. ஏன் அவ்வாறு அரசு செய்ய வேண்டும். ஒரு நிலத்தை ஒருவருக்கு வழங்குவதாயின் சொத்தாக மாற்ற வேண்டும். ஆனால் அதை அரசு செய்யவில்லை.

இராணுவமும் அரசும் நிலத்தை ஆக்கிரமித்துக்கொண்டு அவை மக்களுக்குரியதல்ல தமக்குரியது. எனவே தாம் எதையும் செய்ய முடியும் என்ற எண்ணத்தில் உள்ளார்கள். இது தான் இந்த வறுமைக்கு அடிப்படையான காரணம்

நாட்டின் ஒரு பகுதியில் அசாதாரண சூழ்நிலை காணப்பட்ட இடத்தில் தமது உயிரை காப்பதற்கு வேறு இடங்களுக்கு மக்கள் இடம் பெயர்ந்திருக்கலாம். அந்த இடம்பெயர்வை சாதகமாக பயன்படுத்தி நில உரிமை உள்ள நிலங்களை கூட நாட்டின் பாதுகாப்பு என கூறி அதை கையகப்படுத்தி வைத்திருப்பது என்பது எந்த வகையில் நியாயமானது?

அந்த வகையில் வலி.வடக்கு பகுதியில் கையகப்படுத்தப்பட்ட 24 கிராமசேவகர்பிரிவு மேட்டு நிலபயிர்செய்கைக்கு மிகவும் உன்னதமான பகுதி. கடல் கரையோரமும் செழிப்பான நிலப்பரப்பு உள்ள பகுதி. அப்பகுதியில் உள்ள மக்கள் குடிபெயர்ந்தார்கள்.

இந்த நிலையில் போர் அனைத்தும் முடிந்து விட்டதாக உலகுக்கும் தென்னிலங்கைக்கும் அறிவித்து விட்டு இன்னும் ஏன் அந்த நிலங்களை மக்களுக்கு திரும்ப வழங்கவில்லை. அந்த மக்களை தற்போது வறுமைக்கு உள்ளாக்கியது யார்? இந்த மக்கள் உழைப்பதற்கு தயார். அவர்களின் செழிப்பான நிலம அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

மயிலிட்டி மீனவ துறைமுகம் 1983களில் இலங்கையில் மொத்த மீன்பிடி வருமானத்தில் 43 சதவீதத்தை வட பகுதி மீனவர்கள்தான் இலங்கைக்கு வழங்கினார்கள்.

அந்த வல்லமை தற்போது எங்கே போய் விட்டது. அந்த வினைத்திறன் உள்ள மீனவர்களை மேலும் வினைத்திறனாக்கி நாட்டுக்கான உற்பத்தியை அதிகரித்திருக்கலாம். ஏன் அந்த மீனவர்களை அந்த துறைமுகத்தில் மீள குடியமர்த்தவில்லை. இன்று அந்த துறைமுகம் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த மீனவ மக்கள் தொலைவில் இருந்து தான் தொழிலுக்கு வர வேண்டும்.

அரசுக்கு ஏன் இந்த கள்ளம்? நாங்கள் உங்களை வறியவர்கள் ஆக்கப்போகிறோம். வறுமையில் நீங்கள் இறந்து போக வேண்டும் என நேரடியாக சொல்லுங்கள்.

மக்களின் பிரச்சினைகளை கண்டு கொள்ளவதாக இல்லை. ஏன் அரசு இதை சிந்திக்கவில்லை. பணம் படைத்தவர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் தான் இது நல்லாட்சி அரசு. மக்களுக்கு அல்ல.

ஒரு புறம் வளங்களை தடைசெய்து கொண்டு இன்னொரு புறம் வளங்கள் கிடைக்க வில்லை என கூச்சல் போடுவது மக்கள் நலன் நோக்காத தன்மையை காட்டுகிறது.

வறுமையை தோற்றுவித்தது யார்? மக்களை சுயமாக வாழ விடுங்கள். அரசின் உதவி கூட அவர்களுக்கு தேவையில்லை. அவர்களின் நிலங்களை கொடுத்தால் அவர்களால் சுயமாக வாழ முடியும்.

பாரம்பாரியத்தை அழித்து விட்டார்கள். மீண்டும் பாரம்பரிய தொழிலை செய்ய பயிற்சி நிலையங்கள் அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மக்களின் வளங்களை அரசு மீண்டும் மக்களுக்கு திருப்பி கொடுத்தால் வறுமை தணிப்பு தானாக ஏற்படும். வறுமை கோர தாண்டவம் ஆடாது.

அரசு பொருளாதார திட்டங்களை செயற்படுத்தும் போது நாடு அபிவிருத்திஅடைய வேண்டும் என மேற்கொள்கிறார்கள். வறியவர்களுக்கு குரல் இல்லை. கோரிக்கைகள் வெளிக்கொண்டுவர சந்தர்ப்பம் இல்லை. அரசியல்தான் மேலோங்கி உள்ளது. மக்கள் மத்தியில் இது தொடர்பில் சமூக விஞ்ஞானிகள் பரப்புரை செய்ய வேண்டும்

பாரபட்சம் காட்டி அரசு தான்தோன்றித்தனமாக அபிவிருத்திகளை செய்யுமாக இருந்தால் இப் பிரதேசத்தில்வறுமை ஒழிக்க முடியாது. வடக்கில் முல்லைத்தீவு மாவட்டம் ஆகக் கூடிய வறுமை மட்டம் உள்ள பிர தேசமாக காணப்படுகிறது.

அங்கு நிலப்பரப்பு அதிகமாக உள்ளது. ஆனால் நிலம் அற்றவர்களும் அங்கு தான் உள்ளார்கள். அனைத்தும் அரச காணிகளாக உள்ளது. அந்த மக்களால் காணிகளை வலிமையாக திரும்பி பெற்றுக்கொள்ளக்கூடிய வல்லமை இல்லை

அரசியல் வாதிகள் தமது வாக்குப் பலத்துக்காக மக்களை பயன்படுத்தி குழப்புகிறார்கள் மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கையில் இன்னும் இறங்கவில்லை.

மக்களை பற்றி சிந்திக்காமல் அவர்களின தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் பொருளாதாரத்தை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொண்டால்வறுமையயும்அதிகரிக்கும். அனைவருக்கும் பயன்படக்கூடிய ஏற்றத்தாழ் வில்லாத பொருளாதாரம் கொண்டுவரப்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (மு-9)

# கிராமசேவையாளர்களுக்கு மடிக் கணினி வழங்கல்

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டத்தில் கிராம சேவையாளர்களுக்கு மடிக்கணினி வழங்கும் வேலைத்திட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முற்பகல் பொலநறுவையில் நடைபெற்றது.

தொலைத் தொடர்பு மற்றும் டிஜிட்டல் அடித்தள உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் வழி காட்டலில் **சிமாட் சமூக வேலைத் திட்டம்** எனும் திட்டத்தின் மடிக் கணினி வழங்கும் வேலைத்திட்டத்தை அடையாளப்படுத்தும் வகையில் தமன்கடுவ, திம்புலாகல கில்குறான்கொட பிரதேச செயலக பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் கிராம சேவையாளர்கள் மற்றும் கிராம உதவியாளர்கள் ஆகியோருக்கு ஜனாதிபதியால் மடிக்கணினி வழங்கப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தில் வட மத்திய மாகாண முதலமைச்சர் சேசல ஜயரத்தின மற்றும் அமைச்சர்கள் பொலநறுவ மாவட்ட செயலாளர் ரஞ்சித் ஆரியரட்ன, தகவல் தொழில்நுட்ப உதவி நிலையத்தின் தலைவர் சித்திராங் கனிமுபாரக் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (மு)

# யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளராக எஸ்.தேவகுமாரன் நியமனம்

(யாழப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டக் கல்விப் பணிப்பாளராக எஸ்.தேவகுமாரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனம் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் கடமைகளை பொறுப்பேற்ற இவர் ஏற்கெனவே கிளிநொச்சி கல்வி வலயத்தில் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (மு)

# பௌத்தத்தை...

பிரதான இலக்கு என வெளிநாட்டு அமைச்சர் நினைவுபடுத்தினார். அத்தோடு பௌத்த மதத்தைப் பாதுகாத்தல் போசித்தல் எம் அனைவருடைய கடமையும் பொறுப்புமாகும்.

இவ்வாறு மறைந்த முன்னாள் விளையாட்டு அமைச்சர் டி.எ.சுகததாச அவர்களின் 44ஆவது ஞாபகார்த்த வைபவத்தில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

இவ் நிகழ்வானது சுகததாச மைதானத்திடலின் அருகில் உள்ள அன்னாரின் உருவச் சிலைக்கு அருகில் நடைபெற்றது.

டி.ஏ.சுகததாச அவர்களின் உருவச் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தியபின் மேலும் கருத்து கூறிய அமைச்சர், சுகததாச அவர்கள நாட்டுக்கு ஆற்றிய சேவை அளப்பறியது.

அதேபோல் வடகொழும்பு மக்களுக்கு இவ்வாறான நிகழ்வு மிகவும் பொருத்தமானது மட்டுமல்ல எமது கடமையாகும்.(மு-11)

# வடமராட்சியில்...

வடமராட்சி கிழக்குப் பகுதியில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கொல்லப்பட்டுள்ளார். இந்த துப்பாக்கி சூட்டு சம்பவத்தையடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. வல்லிபுரம் ஆலயத்துக்குச் செல்லும் வீதியில் 6ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர் துன்னாலைச் சேர்ந்த 24 வயதுடைய யோகராசா தினேஸ் என்ற இளைஞன் என அடையாளம் காணப்பட்டார்.

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்தவர்களை இடைமறித்த போது வாகனத்தை நிறுத்தாததன் காரணமாகவே துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் கூறியுள்ளனர். பிரதேசத்தில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஹன்ரர் ஒன்றின் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது அதில் இருந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த சூட்டு சம்பவம் அங்கு பரவியதனை தொடர்ந்து அந்தப் பகுதியில் பெரும் பதற்ற நிலைமை ஏற்பட்டது. உயிரிழந்தவரின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் மருத்துவமனையில் திரண்டனர். மந்திகை மருத்துவமனைக்கு வந்த பருத்தித்துறைப் பொலிஸாரின் ஜீப் மீது ஆத்திரமடைந்த மக்கள் கற்களால் எறிந்து தாக்குதல் நடத்தினர். மந்திகை மருத்துவமனைப் பகுதியில் பதற்றமான நிலைமை ஏற்பட்டதை அடுத்து காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காங்கேசன்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் உட்பட 50 பொலிஸாரும் அவர்களுடன் நான்கு வாகனங்களில் சிறப்பு அதிரடிப் படையினரும் மந்திகை ஆதார மருத்துவனைக்குச் சென்றனர். இவ்வாறு சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கருதப்படும் தமிழ் பொலிஸ் உத்தியோத்தர் ஒருவரின் வீட்டின் மீது தாக்குதல நடத்தப்பட்டுள்ளது. நெல்லியடியில் அமைந்துள்ள அவரது வீட்டின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் வீட்டிலிருந்த பொருட்களையும் சேதப்படுத்தினர். சுமார் 20 பேர் கொண்ட குழுவினர் முகத்தை துணியால் மூடிக் கட்டியவாறு தாக்குதல் நடத்தினர் என்று பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இதனை அடுத்து துன்னாலையில் அமைக்கப்பட்டிருந்த பொலிஸ் காவலரண் ஒன்றும் இனந்தெரியாதோரால் அடித்து நொருக்கப்பட்டது. இவ்வாறு ஆங்காங்கே நேற்றும் நேற்றுமுன்தினமும் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது. இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்துப் பொலிஸ் உத்தியோகத்தர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கொல்லப்பட்ட இளைஞனின் இடுப்புக்கு மேற்பட்ட பகுதியில் சூட்டுக்காயம் காணப்பட்டது என்று மருத்துவ பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று கடும் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

வைத்தியசாலைக்கு நீதிபதி வருகை தந்த போது பொலிஸ் பாதுகாப்பினை விட வைத்தியசாலையினைச் சூழவுள்ள சுற்றுப்புறங்களில் விஷேட அதிரடிப்படையினர் நிறுத்தப்பட்டிருந்ததுடன் வாயிலில் பவல் கவச வாகனமும் விஷேட அதிரடிப் படையினரின் வாகனமும் நிறுத்தப்பட்டு கடும் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

நெல்லியடி கொடிகாமம் வீதியில் போக்குவரத்தை துண்டிக்கும் வகையில் கலிகைச் சந்தி முதல் வேம்படி வரையான பகுதிகளில் நேற்று காலையில் இருந்து ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் உயிரிழந்ததையடுத்தே அப்பகுதியில் ரயர்கள் எரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப் பகுதிக்குச் சென்ற விசேட அதிரடிப் படையினரின் பவள் கவச வாகனம் மீதும் கல்வீசும் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை மாற்றுப் பாதையால் சென்ற இலங்கை போக்குவரத்து சபை பஸ் வண்டி மீதும் கல்வீச்சுத் தாக்குதல் யாக்கருப் பகுதியில் வைத்து நடத்தப்பட்டுள்ளது. (மு-60.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்



## பருத்தித்துறை...

துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர் லொறி சாரதியின் உதவியாளர் என்பது குறிப்பிடத்தக்கது. கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை துப்பாக்கிச் சூடு மேற்கொண்ட பொலிஸார் இருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறை நீதிமன்றம் இருவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (மு-11)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
(C-8976)
UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

கணக்கீட்டு கருத்தரங்கு
R.வின்சன் (B.B.A PGDE)
விடயம்
1. LKAS முழுமையாக
2. புள்ளியிடல் திட்டம்
3. முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்கள்
4. M.C.Q மாதிரிவினாத்தாள்
(9735)
ஆரம்பம் - 11.07.2017 (3 P.M)
தொடர்ந்து 5 தினங்கள்
நடைபெறும் இடங்கள் - NAC மானிப்பாய் மற்றும் மல்லாகம்
077 694 7162

## புதிய அரசியல் யாப்...

யுள்ளார்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் பொன்விழாக்காணும் கலாபூசணம் சலீமை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நிந்தவூர் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா சமஷ்டி என்ற வார்த்தையை தவிர்க்குமாறு பௌத்த துறவிகள் அச்சுறுத்தல் விடுத்து வருவதாக தெரிவித்தார்.

அத்துடன் புதிய அரசியலமைப்பில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்படுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (மு-11)

வீடு வாடகைக்கு
பலாலி வீதி உரும்பிராயில் (ஒஸ்கா லேன் அருகில்) சகல வசதிகளுடன் கூடிய புதியவீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
(9713)
தொடர்பு:0770690275

ஆங்கில வகுப்பு
தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0767070069
M.Suren (9745)

ஓராண்டு நிறைவுகளில்

மண்ணில் 09 . 05 . 1961

விண்ணில் 11 . 07 . 2016



அமரர் அந்தோனிமுத்து கிறகோரி ஜெயசீலன்
(அதிபர் SLPS - I)

முன்னாள் அதிபர் :
01. கிளி/ பரமன்கிராய் அ.த.க பாடசாலை
02. கிளி/ இரணைதீவு றோ.க.த.க வித்தியாலயம்
03. கிளி/பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம்

ஆண்டொன்று ஆனது
எமை விட்டு நீர் பிரிந்து
ஆற்றாது துடிக்கின்றோம்
ஆறுதல் சொல்ல நீர் இன்றி

நீ விட்டுச் சென்ற சுவடுகளை
தடம் பதித்து நடக்கையிலே
நினைவிழந்து செயலிழந்து
நிர்க்கதியாய் நாம் - இங்கு

குல விளக்காய் நீர் எமக்கு இருக்க
குறை என்று ஏதும் கண்டதுண்டோ
பாதி வழியில் நீர் செல்ல - மீண்டும்
வருவீரென்று வழிமேல்
விழி வைத்து ஏங்குகின்றோம்
மீண்டும் எமக்கொரு தந்தையாக

நாம் துன்பத்தில் துவண்டு போக
ஏன் பிரிந்தீர் - எமைவிட்டு
உமை விட்டு இருப்பதற்கு
முடிந்திடுமோ எம்மால்
ஏங்குகிறோம் - உம் முகம் காண

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இரணை மாதா நகர்,
பூநகரி.

தகவல்:

(சி-9034)

## இலங்கையை கண்...

டுள்ள சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில், எதிர்வரும் நாட்களில் போராட்டத்தை தீவிரப்படுத்தப் போவதாகவும் இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவித்துள்ளனர்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தால் மீனவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் 2 வருட சிறைத் தண்டனையும் படகுகளுக்கு அபராதம் விதிக்கும் வகையிலும் சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இலங்கை அரசின் இந்த சட்டத்தால் நாகை மாவட்டம் முதல் தூத்துக்குடி மாவட்டம் வரையுள்ள வங்கக்கடலில் மீன்பிடிக்கும், மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனத் தெரிவித்தே, இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (மு-11)

## ஞானசார தேரர்...

பொது பல சேனாவின் பொதுச் செயலாளரான ஞானசார தேரர் நன்கு அவதானித்துக் கொண்டிருப்பதாகவும், தேவைப்படும் சந்தர்ப்பத்தில் தேரர் வெளியே வந்து குறிப்பிட்ட நபர்களுக்குரிய பாடத்தைப் புகட்டுவார் எனவும் சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல் கந்தே சுதந்த தேரர் அறிவித்தார்.

பொது பல சேனா காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, ஊடகவியலாளர் ஒருவர் ஞானசார தேரர் வருகை தராமைக்கான காரணம் என்னவென வினவிய போதே சுதந்த தேரர் இவ்வாறு பதிலளித்தார்.

பொது பல சேனாவின் செயற்பாடுகள் பல காணப்படுகின்றன. அவற்றில் ஞானசார தேரர் ஈடுபட்டுள்ளார். ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடத்துவது மட்டுமல்ல எமது அமைப்பின் செயற்பாடு எனவும் வழிமறித்து பதிலளித்த அவ்வமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலன்த விதானகே கூறினார். (மு-11)

முழு வகுப்புக்கள் - பிரிவு II
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தமிழ்மொழியும் இலக்கியமும்
ஆசிரியர் திரு.க.மு.நித்தி
(புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்)
✦ தரம் 06- O/L வரையான வகுப்புக்கள்
✦ அலகு ரீதியான பரீட்சைகள்
✦ கடந்த கால வினா-விடை வகுப்புக்கள் (Paper Class)
✦ ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்
(9750)
தொடர்புகளுக்கு: 077 105 1015

பதவிக்கான தேடல் Dynamic
எமது நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கான பதவி தேடல்கள் ஆரம்பமாகிவிட்டன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களில் உள்ளோர் விரும்பத்தக்கது.
✦ O/L, A/L படித்தவர்கள் உடனே அழையுங்கள்
✦ தங்குமிடம், உணவு இலவசம்
✦ அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன
(9751)
தொடர்புகளுக்கு:
0772302795, 0766781042

A/L-2017 தமிழ் மாபெரும் இறுதிக்கருத்தரங்கு
K.சந்திரலிங்கம் M.A(Tamil), M.ED (Hons)
ஆரம்பம் : யூலை 15 (சனிக்கிழமை), பி.ப 1.00 மணி
ஆறு தினங்கள் நடைபெறும்
கையேடுகள் வழங்கப்படும்
முற்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்
DCM யாழ்.நகர்

## நல்லிணக்கக்கார...

2002 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை அன்று செயற்படுத்தி இருந்தால், இன்று மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி இவ்வளவு குப்பைகளை சுமக்கத் தேவையில்லையெனவும் தேரர் குறிப்பிட்டுள்ளார்.

நல்லிணக்கத்தைக் கொண்டுவருவதற்கு எனத் துடிக்கும் என்.ஜி.ஓ. குழுக்களினால் தான் இன்று மகாசங்கத்தினரின் ஒற்றுமையை பேண முடியாதுள்ளதாகவும் தேரர் சுட்டிக்காட்டினார்.

பொது பல சேனா காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார். (மு-11)

## விசேட பொலிஸ்...

வொன்று பருத்தித்துறைக்கு சென்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

அதற்கமைய பொலிஸ் தலைமையகத்தின் விசேட விசாரணை பிரிவின் உதவி பொலிஸ் அதிகாரி உட்பட அதிகாரிகள் குழுவொன்று சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு செல்லவுள்ளனர். (மு-11)

## யாழ் நகரில் இளை...

வீதியில் சென்ற இளைஞர்கள் மீது நேற்றைய தினம் இரவு இளைஞர் குழுவினர் விநோதமான முறையில் தாக்குதலை மேற் கொண்டு அடாவடியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விநோத தாக்குதலில் படுகாயமடைந்த 4 இளைஞர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் இரவு எட்டு மணியளவில் அரியாலை தபால்கட்டை சந்திக்கு அருகில் 6 மோட்டார் சைக்கிள்களில் வந்த 12 பேர் கொண்ட குழுவினர், அவ்வழியால் வந்த 30 வயதுடைய இளைஞர் ஒருவரை பிடித்து வாய்க்குள் துணியை உட்புகுத்தி அவர் மீது தாக்குதலை மேற்கொண்டதுடன், தலையில் வாளினால் வெட்டிவிட்டு சென்றுள்ளனர். படுகாயமடைந்த இளைஞனை வழிப்போக்கர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். காயமடைந்த குறித்த இளைஞருக்கு ஏற்கெனவே குற்றச் செயல்கள் தொடர்பில் யாழ் நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அதே குழுவினர் சிறிது நேரத்தின் பின்னர் நல்லூர் யமுனா வீதி பகுதியில் வேறு ஒரு இளைஞர் குழுவினரை துரத்தி துரத்தி இரும்பு கம்பிகளால் தாக்கியுள்ளனர்

இதில் 3 பேர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த அடாவடித்தனத்தினால் நேற்றைய தினம் இரவு அப்பகுதி எங்கும் பதற்ற நிலை காணப்பட்டது. (மு-9)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.